பக்கங்கள்-16 | 09.தை.2022 | விலை–40.00




# தினப்புயல்

THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –367



## தொல்லியல் வடிவத்தில் அடுத்த கட்ட போர் –என்.சரவணன்

## சர்வதேச வலைப்பின்னலில் மீண்டும் சிக்கப் போகின்றதா தமிழினம்

## கிழக்கில் தமிழர் நிலப்பரப்பை அபகரிக்கத்துடிக்கும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் –வியாழேந்திரன் அதிரடி

## இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியும், தடுமாறும் அரசும்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# தொல்லியல் வடிவத்தில் அடுத்த கட்ட போர்! - என்.சரவணன்

இலங்கையில் சிறுபான்மை இனங்களுக்கு இருக்கும் எஞ்சிய உரிமைகளையும் பறித்தெடுக்கும் வேலைத்திட்டம் மிகவும் நுணுக்கமாகவும், திரைமறைவிலும், பகிரங்கமாகவும் முன்னெடுக்கப்பட்டுவருவதை அறிவோம். சிங்கள பௌத்த வாக்குக்களை மாத்திரம் இலக்கு வைத்து தேர்தல் வியூகங்களை இத்தேர்தலில் முன்னெடுத்துவரும் ஆளும்கட்சி சிங்கள பௌத்தர்களை திருப்திபடுத்தும் பல்வேறு வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறது. அதில் ஒரு அங்கம் தான் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் நிகழ்ச்சிநிரலில் முக்கிய இடத்தில் உள்ள தொல்லியல் விவகாரம்.



இதற்கென்று யூலை மாதம் ஜனாதிபதி கோத்தபாய அமைத்த தனிச்சிங்களவர்களைக் கொண்ட கிழக்கு மாகாணத்துக்கான செயலணி போதாதென்று இப்போது கடந்த யூலை 29 அன்று பிரதமர் ராஜபக்ச நாடளாவிய ரீதியில் இயங்கக் கூடிய 20 தனிச்சிங்களவர்களைக் கொண்ட ஒரு செயலணியை ஆரம்பித்திருகிறார். இது தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான வெளிப்படையான தொல்லியல் போர் பிரகடனம் என்றே உறுதி செய்துகொள்ள முடிகிறது.

பொலன்னறுவை சொலஸ்மஸ்தான ரஜமகா விகாராதிபதி, மகாவிகாரை வம்சிகா ஷியாமோபாலி மகா நிகயாவின் அஸ்கிரிய மகா விகாரை தரப்பு வெண்டருவே தர்ம கீர்த்தி ஸ்ரீ ரதனபால உபாலி தேரர்
தக்ஷித இலங்கையின் பிரதான சங்கநாயக்க பண்டிதா மெட்டரம்ப ஹேமரதன தேரர்
அனுராதபுர ருவன்வேலி சே விஹாரதிகாரி கலாநிதி பல்லேகம ஹேமரதன தேரர்
தொல்லியல் சக்கரவர்த்தி சக்ரவர்த்தி எல்லவாலா மெத்தானந்த தேரர்
அலிக்கேவெல சீலானந்த தேரர்
அஸ்கிரிய தரப்பின் பெலிகல் கோரளையின் தலைமை சங்க நாயக்க யடிகல் ஒலுவே விமலரதான தேரர்
சோமாவதி ராஜமஹா விஹாரதிபதி கலாநிதி பஹமுனே ஸ்ரீ சுமங்கல தேரர்
பேராசிரியர் இந்துராகாரே தம்மரதன தேரர்
கலாநிதி மதுருஓயா தம்மிஸ்ஸர தேரர்
தொல்லியல் திணைக்கள முன்னாள் இயக்குநர் ஜெனரல் டாக்டர் ஷிரான் தெரணியகல
தொல்லியல் பேராசிரியர் டி.ஜி.குலதுங்க
கலாநிதி காமினி விஜேசூரிய
சிரேஷ்ட பேராசிரியர் நிமல் டி சில்வா
வித்யஜோதி பொறியாளர் கெமுனு சில்வா
சிரேஷ்ட பேராசிரியர் அனுர மனதுங்க
வாஸ்து சாஸ்த்திரர் ஆஷ்லி த வோஷ்
சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ
டபிள்யூ.எம்.எஸ் வீரசேகர
சிரினிமல் லத்துசிங்க
பேராசிரியர் முனிதாச பத்மசிறி ரணவீர

இவர்களில் கலாநிதி காமினி விஜேசூரியவைத் தவிர எஞ்சிய அனைவரும் இனவாதத்தின் பிரதிநிதிகளாக இயங்கிவருபவர்கள். 13ஆம் நூற்றாண்டில் இரண்டாம் புவனேகபாகு ஆட்சியில் குருநாகல் நகரில் கட்டப்பட்ட ராஜ மண்டபத்தை சில நாட்களுக்கு முன்பு மகிந்த தரப்பினரால் இடித்துத் தள்ளப்பட்டது பெரும் சர்ச்சைக்கு உள்ளானதால் தொல்லியல் விடயத்தில் தமது அதீத நம்பகத்தன்மையை சிங்களவர்களுக்கு நிரூபிக்கும் நோக்கில் இந்த செயலணியை மகிந்த ராஜபக்ச அவசர அவசரமாக அமைத்ததாகவே தெரிகிறது.

தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிக்கும் கருவிகளாக புத்தர் சிலைகளும், அரச மரங்களுக்கும், பௌத்த விகாரைகளும் தான் பேரினவாதிகளால் பயன்படுத்தப்பட்டு வந்தன. யுத்தத்தின் பின்னர் "தொல்பொருள்" பேரால் பாரிய அளவில் நேரடியாகவும், உத்தியோகபூர்வமாகவும் அரச அனுசரணையுடன் அவ்வாக்கிரமிப்புகள் பேரெடுப்பாக கிளம்பியுள்ளன. "கோணமலை கோவில்" அல்ல "கோகர்ண விகாரை" அது என்கிற உரிமை கொண்டாடல் அரை நூற்றாண்டுக்கும் மேலாக சொல்லி வருவது தான். ஆனால் இப்போது அம் முன்னெடுப்புகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. கோணேஸ்வரம் கோவிலின் பூர்வீகம் பற்றியோ, அது பற்றிய வரலாற்று தொல்லியல் தகவல்களுக்குள் இக்கட்டுரை நுழையாது. ஏனென்றால் அதைப் பற்றி தாராளமாக பல நூல்களும், பல கட்டுரைகளும் வெளிவந்து விட்டன. ஆனால் சிங்கள அரசும், சிங்கள பௌத்த பேரினவாத தரப்பும் தமிழர்களின் தேச அடையாளத்தை சிதைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முனைப்புகளில் தொல்லியலுக்கு உள்ள பாத்திரம் பற்றி கவனிக்கப்படாத / கவனிக்கப்பட வேண்டிய பகுதிகளை கவனிக்கப்பண்ணுவதே இக்கட்டுரையின் நோக்கம். சிங்கள அரசும், சிங்கள பௌத்த பேரினவாத தரப்பும் தமிழர்களின் தேச அடையாளத்தை சிதைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முனைப்புகளில் தொல்லியலுக்கு முக்கிய வகிபாகம் உண்டு.

ஏற்கெனவே தமிழர்களுக்கு எதிராக தொல்லியல் போர் தொடங்கியாயிற்று. தொல்லியல் ஒரு பண்பாட்டு வன்முறையாகவும் அணுகத் தொடங்கியாயிற்று. இம்மாதம் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச கிழக்கு மாகாணத்தில் தமிழர் பகுதிகளில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக "தொல்லியல் செயலணி" ஒன்றை ஆரம்பித்தார். தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கு மாகாணப் பகுதிகளில் தொல்பொருள் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான அந்த செயலணியில் தமிழ், முஸ்லிம் சமூகத்தவர் எவரையும் பிரதிநிதித்துவப்படுத்தாத தனிச் சிங்கள பௌத்தர்கள் 11 பேரைக் கொண்ட செயலணியாக அது உருவாக்கப்படிருக்கிறது.

கோத்தபாய பாதுகாப்பு அமைச்சராக இருந்த காலத்திலேயே தொல்லியல் சாட்டில் பிக்குமார் மேற்கொண்ட பல்வேறு நில ஆக்கிரமிப்புகளுக்கும் கோத்தபாயவைத் தான் பயன்படுத்தினார்கள். துட்டகைமுனுவுக்குப் பின்னர் இலங்கையை ஐக்கியப்படுத்திய நவீன துட்டகைமுனுவாக கோத்தபாய சிங்கள பௌத்தர்களால் கொண்டாடப்படுபவர். அந்த வெற்றிக்காகவே எத்தனை அராஜகங்களையும் பொறுத்துக்கொண்டு மீண்டும் மீண்டும் வெற்றியைக் கொடுக்க தயாராக உள்ள மக்கள் சிங்கள மக்கள். அதற்கு கைமாறாக சிங்கள பௌத்த பாரம்பரியங்களை காப்பாற்றும் மீட்பனாக தன்னை தொடர்ந்து நிறுவும் முயற்சியில் ராஜபக்ச குடும்பம் ஈடுபட்டுவருகிறது. அந்த நீட்சியின் ஒரு அங்கமே கோத்தபாய தொல்லியல் விடயத்தில் முழுமையான ஒத்துழைப்பை பேரினவாத சக்திகளுக்கு வழங்குவது.

கோத்தபாய ஜனாதிபதியாக தெரிவானதும் அமைச்சரவை அமைக்கப்பட்டதும் அதில் செய்த முதல் வேளை இந்து, முஸ்லிம் விவகார அமைச்சுகளை கலைத்துவிட்டு புத்தசாசன அமைச்சை மட்டும் வைத்துக்கொண்டது தான். ஏனைய மதங்களையும் "இலங்கையின் புத்தசாசன அமைச்சரிடமே பொதுவாக சமய விவகார அமைச்சு என்கிற பேரில் கொடுத்தாயிற்று. அந்த புத்தசாசன, சமய விவகாரங்களை பிரதமர் மகிந்த ராஜபக்சவிடமே ஒப்படைத்தாயிற்று. அது போல முன்னர் அரசகரும மொழிகள் அமைச்சையும் கலைத்து தமிழ் மொழி அமுலாக்கல் சம்பந்தமாக பணிகளை முடக்கினார்.

மகிந்த ராஜபக்சவிடம் தான் கலாசார அமைச்சும் உள்ளது. அந்த அமைச்சின் கீழ் தான் தொல்லியல் திணைக்களமும் உள்ளது. "பௌத்த ஆலோசனை சபை" என்கிற ஒரு உயர் குழுவொன்று அரசாங்கத்துக்கு வழிகாட்டவென இயங்கி வருகிறது. மகாசங்கத்தினர் அனைவரும் இதில் அங்கம் வகிக்கின்றனர். இந்த சபைக்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் எந்தளவு என்று கூறுவதாயின் மாதாந்தம் மூன்றாவது வெள்ளி நாட்களில் ஜனாதிபதி காரியாலயத்தில் ஜனாதிபதியின் தலைமையில் இந்த சபை கூடி வருகிறது.

அப்படி மே மாதம் 22 ஆம் திகதி கூடிய வேளை அன்றைய கூட்ட நிகழ்ச்சிநிரல் படி கிழக்கு தொல்லியல் செயலணியை அமைப்பதற்கான தீர்மானமும் எடுக்கப்பட்டது. இதற்கான விளக்கங்களை விரிவாக அங்கு பேசினார் எல்லாவல மெத்தானந்த தேரர். இந்த கூட்டத்தில் இலங்கையின் பிரபல இனவாத பிக்குமார் பலரும் கலந்து கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. அமரபுர தர்மரக்ஷித்த பிரதான சங்க நாயக்க தேரரான திருகோணமலையைச் சேர்ந்த ஆனந்த தேரரும் கலந்துகொண்டிருந்தார்.

**செயலணியின் உருவாக்கம்**

இதனைத் தொடர்ந்து அதற்கான வேலைகள் மிகவும் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டன. இறுதியில் இது தொடர்பான பிரகடனம் 2178/17 இலக்க வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பீ.ஜெயசுந்தரவினால் யூன் 02 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இந்த 11 பேரில் துறைசார் நிபுணர்கள் கூட ஒரு சிலரே மற்றவர்கள் அனைவரும் இராணுவ, பொலிஸ், புலனாய்வுத்துறை அதிகாரிகளும், அரசியல்வாதிகளும், கோத்தபாயவுக்கு வேண்டப்பட்ட ஊடக நிறுவனத்தின் உரிமையாளரும் தான்.

தமிழ் பேசும் சமூகத்தவரும் இந்த செயலணியில் இணைக்கவேண்டும் என்று டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் கோரியிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. அப்படி தமிழ் பேசும் ஒருவர் தெரிவாகிவிட்டால் தமிழ் பேசும் சமூகங்களின் அபிலாசைகள் அங்கு நிறைவேற்றப்படுமா. அதற்கான பலம் தான் அவர்களுக்கு இருக்குமா என்பது வேறு கதை. சிங்கள பௌத்த நிகழ்ச்சிநிரலை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாகத் தான் அவர்களாலும் இயங்க முடியும் என்பது வெளிப்படை. இங்கு நபர்களை நியமிப்பதல்ல முக்கியம் சிங்கள பௌத்த பேரினவாத சித்தாந்தத்தைக் கொண்ட அடிப்படை உள்நோக்கமே நமக்கு பிரச்சினையானது. 2019 ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் அரசாங்கத்தின் போது தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம் கிழக்கில் ஆய்வுகளை மேற்கொள்ளும் போது, துறைசார் தமிழ் - முஸ்லிம் பிரதிநிதிகளையும் உள்ளடக்க வேண்டுமென்கிற தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. கோட்டாபய ராஜபக்ச 2019 நவம்பரில் பதவியேற்றதும் அந்தத் தீர்மானம் கைவிடப்பட்டு முற்றுமுழுதாக சிங்களவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிங்கள பௌத்தர்களை மட்டுமே கொண்ட ஒரு ஆபத்தான குழு. இராணுவத் தளபதி, பிக்குமார், ஆகியோரை தலைமையாகக் கொண்ட அந்தக் குழு ஒரு இராணுவவாத, இனவாத குழுவென்பதை சொல்லித்தெரிய வேண்டியதில்லை. "கிழக்கு மாகாணத்தினுள் தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயலணி" என்கிற பெயரில் அந்த குழு நியமிக்கப்பட்டது. பின்வரும் 11 பேர் அதற்கு நியமிக்கப்பட்டார்கள்.

**பனாமுரே திலகவங்ச நாயக்க தேரர்**

வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரு மாகாணங்களின் மற்றும் தமன்கடுவ பிரதேசத்தின் பிரதம சங்கநாயக்க அரிசிமலை ஆரணியத்தைச் சேர்ந்தவர். 1980 ஆம் ஆண்டு அன்றைய தொழில் அமைச்சர் சிறில் மெத்தியு வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு பௌத்த பிக்குமார்களை அழைத்துக்கொண்டு சென்று அங்குள்ள நூற்றுக்கணக்கான இடங்கள் பௌத்த தொல்பொருள் இடங்கள் என்று அடையாளம் காட்டினார். அது பற்றிய ஒரு நூலையும் வெளியிட்டார். அந்த பகுதிகளை கைப்பற்றுவதாயின் அங்கு பௌத்த விகாரைகளை நிறுவ வேண்டும் என்கிற திட்டத்தை வகுத்து கொடுத்தது சிறில் மெத்தியு தான். இதனை நிறைவேற்ற "அரச தொழிற்துறை பௌத்த சங்கம்" என்கிற பெயரில் ஒரு அமைப்பையும் நிறுவினார். அதன் மூலம் நூறு பௌத்த விகாரைகளை வடக்கு கிழக்கு பகுதிகளில் சீர்திருத்தி தெற்கில் ஒரு பிரகடனமொன்றாக வெளிப்படுத்தினார். அந்த நூறில் ஒரு விகாரை தான் திருகோணமலையில் கடலை அண்டி காணப்படும் அரிசிமலை விகாரை. விடுதலைப் புலிகளின் காலத்தில் கடற்புலிகளின் தளமாக இருந்தது. 2009இல் யுத்தம் முடிந்ததன் பின்னர் அந்த விகாரையின் பிரதம பிக்குவாக வந்து சேர்ந்தவர் தான் பனாமுரே திலகவங்ச தேரர். அதனை சீர்திருத்தி பாதுகாக்கும் பணிகளை அருகில் இருக்கும் இலங்கையின் கடற்படை முகாமைச் சேர்ந்தவர்கள் மேற்கொண்டார்கள். PERL என்கிற அமைப்பு இந்த பௌத்த ஆக்கிரமிப்பு குறித்து மனித உரிமைகள் கவுன்சிலுக்கு முறைப்பாடும் செய்திருந்ததது. பனாமுரே தேரர் இனவாத அணிகளோடு சேர்ந்து தமிழர் - முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத முன்னெடுப்புகளில் தொடர்ந்து பங்களித்து வருகிறார்.

**மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன (செயலாளர், பாதுகாப்பு அமைச்சு)**

இறுதி யுத்தத்தில் மூர்க்கமான படுகொலைகளைப் புரிந்த 53 வது படைப்பிரிவின் தளபதி. இப்படைப்பிரிவு தான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் சடலத்தை கண்டெடுத்ததாக அறிவித்தது. ஆனால் பிரபாகரனை கொன்றது தாமே என்று உத்தியோகபூர்வமற்றமுறையில் கூறித்திரிபவர்கள். தனது யுத்தகள அனுபவங்களை திரட்டி இதுவரை மூன்று நூல்களை எழுதியிருக்கிறார். அவற்றில் "போர்ப்பதையில் நந்திக்கடல்" என்கிற 850 பாகங்களைக் கொண்ட விலையுயர்ந்த நூல் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் லட்சக்கணக்கான பிரதிகள் விற்றுத் தீர்ந்துள்ளன.

தொடரும்...

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## அரசின் பலவீனமே பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம்

கடந்த காலங்களை விட கொவிட் தொற்றுக்குப் பின்னரான இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி என்பது இன்று சர்வதேச மற்றும் உள்ளூர் ரீதியாக பேசுபொருளாக மாறியிருக்கிறது. அத்துடன் இன்றைய ஆட்சியில் இருக்கும் ஜனாதிபதி கோட்டாபய மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச அவர்களின் தலைமையிலான ஆட்சி தொடர்பில் அதிருப்தியும், விமர்சனங்களும், பலவீனமும் வெளிப்பட்டு வருவதை நேரடியாகவே காணக்கூடியதாகவிருக்கிறது.

இன்றைய அரசில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும், உள்ளூராட்சிமன்றங்களின் உறுப்பினர்களும் என பங்காளிகளே அரசின் செயற்பாடுகள் குறித்து கருத்துக்களை வெளியிட ஆரம்பித்துள்ளனர். இன்றைய அரசு ஒரு கட்டுக்கோப்புடன் செயற்படுவதாகத் தெரியவில்லை. கடந்த நல்லாட்சியினைப் போலவே தனித்து அல்லாமல் கூட்டணியுடன் இயங்கிவரும் இவ்வரசு ஆட்டங்காண ஆரம்பித்துள்ளது. அடிக்கடி அமைச்சர்களையும் உயர் அதிகாரிகளையும் மாற்றிவருவதன் மூலமாகவும், தெற்கில் இருந்து வரும் கருத்துக்களாலும் இன்றைய அரசு எந்தளவுக்கு பலவீனமாகியுள்ளது என்பது நன்றாகப் புலப்படுகின்றது.

சர்வதேச நாடுகளின் அழுத்தங்களில் இருந்து தம்மைப் பாதுகாக்க இயலாத கையறு நிலைக்கு அரசு சென்றுள்ளது. கொவிட் நோயைக் கட்டுப்படுத்துவதில், நாட்டின் சகல துறைகளையும் இயக்குவதில் என பிரச்சினைகள் பூதாகரமாக உருவெடுத்துள்ளன. இராணுவத்தின் தலையீடுகளினால் ஜனாதிபதியின் செயற்பாடுகள் கூட அருவருக்கத்தக்கதாக மாறியுள்ளது. அவர் உருவாக்கிய ஞானசார தேரர் தலைமையிலான செயலணி அவருக்கு அபகீர்த்தியினைத் தேடித்தந்திருக்கிறது.

நாட்டின் பொருளாதாரத்தினை முன்கொண்டு வளர்ச்சிப் பாதை நோக்கிப் பயணிக்க வைக்க உரிய செயற்பாடுகளைச் செய்ய முடியாமல் அரச தரப்பினர் தடுமாற்றம் கண்டுள்ளனர். இன்று நாட்டின் தொழிற்சங்கங்கள் வீதிகளில் இறங்கிப் போராடவும், வேலை நிறுத்தங்களை செய்யவும் முன்வந்து களத்தில் இறங்கினர். எனினும் இவர்களுக்கான உரிய தீர்வுகளை வழங்குவதில் அரசின் இயலாமை வெளிப்பட்டு நிற்கிறது. வெறுமனே உற்பத்திகளின் அதிகரிப்பில் போதிய அக்கறை காட்டப்படாமல் கிராமிய மட்டத்திலான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான விடயங்கள் உரிய முறையில் செயற்படுத்தப்படாமலும் கண்காணிப்புக்களற்றும் கிடக்கிறது. பதவிக்கு வந்து எதனையும் செய்ய முடியாத துன்பகரமான நிலைக்கு இன்றைய ஆட்சியாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

எது எவ்வாறிருப்பினும் இவ்வரசின் பதவிக்காலம் தொடரவேண்டுமாயின் தத்தம் பங்காளிக் கட்சிகளின் செல்வாக்கினையும், நாட்டு மக்களின் நன்மதிப்பினையும், சர்வதேச ரீதியிலான சுமுகமான உறவினையும் பேண வேண்டியது இவ்வரசிற்கு மிகவும் முக்கியம். அத்துடன் விலையேற்றங்களால் மக்கள் சினமடைந்துள்ளனர். இதனை தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருக்க முடியாது. நாடு பட்டினிச்சாவினை நோக்கி நகரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை தலையெடுக்கும். வேலைவாய்ப்பின்மை அதிகரிக்கும். இன்று அரச ஊழியர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடன் சுமை அதிகரித்துள்ளது. நாட்டினைப் பொருளாதார ரீதியில் வளர்ச்சிப் பாதை நோக்கி முன்கொண்டுசெல்லவேண்டுமாயின் முதலில் வலுவான ஆட்சிக் கட்டமைப்பு என்பது மிகவும் அவசியம். இல்லையெனில் ஆட்சிமாற்றம் என்பது தவிர்க்க முடியாததொன்றாக அமைந்துவிடும்.

172

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

புதிய அதிகாரத் தரப்பினருடன் தொடர்பு வைத்திருப்பதாகச் சந்தேகிக்கப்படுபவர்கள் போன்றவர்களே அவர்களாவர். 1944–1956 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் லித்துவேனியாவில் போராளிகளால் கொல்லப்பட்ட 25018 பேரிலும் காயப்படுத்தப்பட்ட 2965 பேரிலும் 23000 பேர் லித்துவேனியர்களாக இருந்தனர். எண்ணிக்கையிலும் பொருட் தளபாடங்களிலும் விஞ்சிய நிலையிலிருந்து அரச படைகளின் வினைத்திறனின்மையே லித்துவேனியக் கெரில்லாக்களின் சமர் வினைத்திறனுடையதாக அமைந்ததற்கான காரணங்களாக இருந்தன.



மேலே குறிப்பிட்ட சமூக உளவியல் மற்றும் அரசியல் நிலைமைகள் தவிர, இரு தரப்பினரதும் செயற்பாட்டின் தந்திரோபாயத்திலும் இதற்கான பதிலைத் தேடவேண்டும்.

கெரில்லா வழிவகையிலான போராட்டத்தின் சில சிறப்பியல்புகளைப் பற்றிய விளக்கத்தை, குறிப்பாக 1944 ஆம் ஆண்டின் நவம்பர்-4 ஆம் நாளில் வெளியான லித்துவேனிய விடுதலை இராணுவத்தின் (எல்.எல்.ஏ) உயர்பீடக் கட்டளை தருகின்றது. அதில் கூறப்படுவது யாதெனில், உட்துறையமைச்சின் மக்கள் சபை, பிராந்திய நிர்வாகம், ஒற்றர்கள் போன்றவர்களுக்கெதிராக வெற்றிகரமாகப் போராடுவதற்காக, இரக்கமற்ற கண்டிப்பான போரைத் தொடுக்கவேண்டும். உட்துறையமைச்சின் மக்கள் சபையின் படைப்பிரிவுகளின் எண்ணிக்கை, அவர்களின் ஆயுதம், அவர்களது காவல் நிலைகள், விழிப்புத்திறன் போன்றவாறான விடயங்கள் பற்றிய துல்லியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

பலத்தையன்றி, தந்திரத்தையும் படைப்பையும் அடிப்படையாகக் கொண்ட திட்டங்களை உருவாக்கவேண்டும்.

தேவையானளவு ஆட்களை நியமித்து, நடவடிக்கைகள் இரவில் மாத்திரமே மேற்கொள்ளப்படவேண்டும். இந்த நோக்கத்திற்காகப் பிற இடத்திலிருந்து வந்த காவற்றுறையினர் மற்றும் உட்துறையமைச்சினர் போன்றோர் போலச் செயற்படுவது சிறந்தது. சாத்தியமென்றால், ரசிய ஆடை அணிவதுடன், ரசிய மொழியும் கதைக்க வேண்டும்.

ஆபத்து ஏற்படுகின்ற சமயத்தில் புனைகதையைப் பயன்படுத்தி பிரதேசவாசிபோல, அவனது பெயரைப் பயன்படுத்தித் தன்னைக் காட்டிக்கொள்ளாமல் உருமறைத்துக்கொள்ளவேண்டும்.

வேட்டைக்குச் செல்கின்ற தனியான உட்துறையமைச்சுக்காரர்களையும் சிறிய குழுக்களையும் எதுவிதத் தடயமுமின்றி, அவர்கள் காணாமல் போய்விட்டார்கள் என்ற எண்ணமே தோன்றும்படி, அழித்துவிடவேண்டும். ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் விநியோகிக்கும் நோக்கில் அழிக்கப்பட்ட ஆட்களிடமிருந்து சகல ஆயுதங்களையும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

செஞ்சேனைப் படைகளிடம் சமகோன் (கள்ளச்சாராயம்) சாராயத்தைக் கொடுத்துப் பண்டமாற்றாக ஆயுதத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறான தந்திரோபாயம் பிணக்கின் முழுக் காலப்பகுதிவரை கொள்கையளவில் மாற்றமடையாமல் இருந்தது. இதனது உட்பொருள் யாதெனில், அதிகூடியளவில் இழப்பைக் கொடுக்கின்ற வகையில் ஒவ்வொரு நடவடிக்கையிலும் எதிரிமீது திகைப்புத் தாக்குதலைத் தொடுத்தலும் வேகமாகப் பின்வாங்குதலுமாகும். கூடுதலான தாக்குதல்களை லித்துவேனியக் கெரில்லாக்கள் மிக மட்டுப்படுத்தப்பட்ட படைகளுடனும் 2 - 3 பேரைக் கொண்ட குழுக்களுடனுமே மேற்கொண்டார்கள். பெரியளவில் அமைப்புக்களைக் கொண்டுள்ள நிலையில் சமர் மேற்கொள்ளப் பின்வரும் சமயங்களில், அதாவது வேறு வழி இல்லையென்ற நிலைமைகளில் மாத்திரமே அனுமதிக்கப்பட்டது. இவ்வாறான நிலைமையில் காட்டுச் சகோதரர்கள் மிகவும் திடமாகச் செயற்பட்டார்கள். எடுத்துக்காட்டாக, 1945 ஆம் ஆண்டு உட்துறையமைச்சின் இரண்டு டிவிசன்கள் கிட்டத்தட்ட 800 பேரைக் கொண்ட கெரில்லாக் குழுக்களினது இடத்திற்குச் சென்றவுடன், அவர்களை நிலையான தற்காப்புச் சமர் மேற்கொள்ள நிர்ப்பந்தித்தன. அச்சமரின் தன்மையை அதனது தரவுகள் வெளிக்காட்டுகின்றன. தமது தரப்பில் 150 பேரை இழந்த கெரில்லாக்கள், கிட்டத்தட்ட 800 எதிரிப் படைகளை அழித்தனர். கெரில்லாக்களிடம் மிகவும் கண்டிப்பான விதிமுறையொன்று இருந்தது. அது யாதெனில், எச்சூழ்நிலையிலும் கைதியாகப் பிடிபடக்கூடாது. இதன் மூலம் தனது படைப்பிரிவையும் தனது குடும்பத்தையும் ஆபத்திற்குள்ளாக்கக் கூடாது என்பதாகும்.

ஆகவேதான், மாற்றுவழியில்லாத நிலைமையில் அவர்கள் கொடூரமான எதிர்ப்பை வெளிக்காட்டினர். கைதியாகப் பிடிபடுகின்ற யதார்த்தநிலை முகத்தைச் சிதைக்கும் நோக்குடன் தங்களைக் கையெறிகுண்டால் தகர்த்தனர். அவர்களின் இரக்கமற்ற நிலைபற்றிய செய்தி எதிரிகளிடத்திலும் பரவியிருந்ததென்பது அவசியம் குறிப்பிடவேண்டிய விடயமாகும். இதனாலேயே லித்துவேனியாவில் கெரில்லாக்களுடன் சமரிட்ட சோவியத் படைகளும் நெருக்கடியான சூழ்நிலைகளில் கைதாவதைவிடச் சாவது மேலெனக் கருதினர்.

லித்துவேனியாவில் போர்க்காலம் முழுவதும் ஆயுத எதிர்ப்பியக்கம், அதனது வெவ்வேறு படைப்பிரிவுகளின் பெரியளவிலான சுயாட்சி, தலைமைத்துவ நிலையத்திலிருந்து அவர்கள் சுதந்திரமாக இயங்கியமை ஆகிய விடயங்களால் வேறுபட்டு நிற்கின்றது. இதுவே குடியரசாவிய அளவில் போராளிகளின் தனியான படைகள் படைநகர்த்தலையும் முயற்சிகளையும் ஒருமித்துச் செயற்படுத்துகின்ற திட்டத்தில் எதிர்மறைப் பங்கு வகிக்கச் சாத்தியமாக இருந்திருக்கலாம். ஆனால் அதேநேரத்தில் பரவலாக இருந்தமை எதிர்ப்புக்களின் தோற்றுவாய் தாக்கப்படுவதைக் குறைத்திருக்கின்றதுடன், அமைப்பின் நடுவகக் கட்டமைப்பை அழிப்பதால் அமைப்பு முழுவதும் அழிக்கப்படும் சாத்தியத்தையும் குறைத்திருக்கின்றது. ஒட்டுமொத்தத்தில் பால்டிக் குடியரசுக் கெரில்லாக்களின் சிறப்பியல்பாக பன்முகப்படுத்தல் (பரவலாக்கல்) விளங்குகின்றது. ஆனால் ஏகோபித்த தலைமைத்துவம் இல்லாமை பிரதேச வரம்புக்குள் (நீண்டகாலமாக நெருக்கமான முற்றுகைக்குள் இருந்து செயற்படவும் உயிர்வாழவும் நிர்ப்பந்திக்கப்பட்ட கெரில்லாக்களுக்கு ஏற்பட்ட நிலை) கண்டிப்பான ஒழுங்கு நடைமுறைகளை அமுலாக்கியமையால் நிவர்த்தி செய்யப்பட்டது.

உண்மையில் தோற்றம் பெற்ற பரவலாக்கல் தன்னை மெய்ப்பித்து நிற்கின்றதுடன், பின்வரும் சம்பவமும் அதனை நிரூபிக்கின்றது. எல்.எல்.ஏ தலைமைத்துவம் இளநிலைக் கட்டளையாளர்களைத் தயார்ப்படுத்துவதற்கான பயிற்சி நிலையங்களை உருவாக்கியது. தனியான பயிற்சித் திட்டத்தைக் கடந்த முதலாவது தெரிவுத் தோற்றுநர்கள் 1947ஆம் ஆண்டு வெளியேறுதல் எதிர்ப்பியக்கத்திற்கு மிகவும் ஒருவகைப்படுத்தப்பட்டதும் ஒருங்கமைக்கப்பட்டதுமான பண்பை வழங்க உதவி செய்திருக்கலாம். ஆனாலும் இந்நிலையம் உருவாக்கப்பட்டபின் மிக விரைவிலேயே இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டது. எதிர்ப்பியக்க இராணுவத்தின் கட்டளையாளர்களது கணிப்பீட்டின்படி அந்த நிலையத்தின் இழப்பினால் ஏற்பட்ட சேதாரம் எதிர்பார்க்கப்பட்ட பலாபலன்களைவிட அதிகமாகவே இருந்தது. பின்வந்த காலங்களில் மையப்படுத்தப்பட்ட தயார்ப்படுத்தல் என்றகொள்கைமீளக்கருத்திலெடுத்துக் கொள்ளப்படவில்லை.

ஒரே பிரதேசத்தில் செயற்பட்ட ஒவ்வொரு படைப்பிரிவினதும் சாதாரண எண்ணிக்கை 6 - 10 பேருக்குட்பட்டதாகவே இருந்தது. இது உட்துறையமைச்சுப் படைகளின் செயற்பாட்டிற்கு மிகவும் சிரமத்தைத் தந்தது. இவ்வாறான சூழ்நிலைகளில் அதனது பிரதான பணியகக் கெரில்லாக்களின் தங்குமிடங்கள், முகாம்கள், பதுங்குகுழிகள், களஞ்சியங்கள், கெரில்லாக்களுடன் தொடர்புடைய ஏனைய மையங்கள் போன்றவற்றைக் கண்டறிதலே விளங்கியது.

**தொடர்வான்....**

**நெற்றிபொறியன்**

# இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியும், தடுமாறும் அரசும்




முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இலங்கையினது பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளதாக தற்போதைய அரசு அறிவித்துள்ளதுடன், இந்தப் பொருளாதார வீழ்ச்சியானது இலங்கையைப் பொறுத்தவரை திடீரென ஏற்பட்டதொன்றல்ல. எனினும், கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான புதிய அரசாங்கம் பதவியேற்ற கையுடன் உலகளாவிய ரீதியில் கொவிட் வைரஸ் பரவ ஆரம்பித்து இலங்கையையும் தனது பிடிக்குள் சிக்கவைத்துள்ளது. இதனால் இலங்கையினது உற்பத்திகளில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், சர்வதேச நாடுகளுடனான ஏற்றுமதிக்கும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. சுற்றுலாத்துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. டொலர் கையிருப்பில் இல்லை. அரசியல் ரீதியான குழப்பங்கள் என இலங்கையினது பொருளாதாரம் முன்னர் இருந்ததைவிட கொவிட் வைரசுக்குப் பின்னரான காலப்பகுதியில் பெரும் நெருக்கடியினைச் சந்தித்துள்ளது. அரசியல் ரீதியான பிரச்சினைகளும், சர்வதேச நாடுகளின் தலையீடுகளும் அழுத்தங்களும், கடன் சுமைகளும், கடந்த கால அரசுகளின் முறையற்ற திட்டங்களும், உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் என இன்னும் பல காரணங்கள் இவ் இன்றைய பொருளாதார வீழ்ச்சிக்குத் தாக்கம் செலுத்துகின்றன.

இலங்கையில் 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான பொருளாதார வளர்ச்சி 1.5 சதவிகித எதிர்மறையான வளர்ச்சி வீதத்தில் மதிப்பிடப்பட்டுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2020 மூன்றாம் காலாண்டில் 25,36,490 மில்லியன் ரூபாவிலிருந்து 2021 மூன்றாம் காலாண்டுக்கான நிலையான விலையில் 24,97,489 மில்லியன் ரூபாவாக குறைந்துள்ளது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (GDP) 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் தற்போதைய விலையில் 40,87,148 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் தற்போதைய விலையில் 41,32,955 மில்லியன் ரூபாவாக 1.1 வீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கை சீனாவின் ஒரு முக்கிய நட்பு நாடு. இரு நாடுகளுக்குமிடையில் நீண்ட காலமாக தொடர்ச்சியான சுமுகமான உறவுகள் இருந்து வருகின்து. அண்மையில் நாம் கொவிட் 19 அனர்த்தத்திற்கு முகம்கொடுத்திருந்த போது நீங்கள் எங்களுடன் இருந்தீர்கள். கொரோனா நோய்த்தொற்றுக்கு பின்னரான இலங்கையின் பொருளாதார எழுச்சிக்கு அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்க சீனா தயாராகவுள்ளது என்று இலங்கையின் பதில் சீன தூதுவர் ஹூ வெய் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களை சந்தித்தபோது தெரிவித்திருந்ததுடன், இறப்பர் – அரிசி ஒப்பந்தம் காலம் முதல் சீனா இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்பை நினைவுகூர்ந்த ஜனாதிபதி அவர்கள் போர் இடம்பெற்ற காலத்திலும் போருக்கு பின்னரான பொருளாதார அபிவிருத்திகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் சீனாவிடமிருந்து குறிப்பிடத்தக்க ஒத்துழைப்புகள் கிடைக்கப்பெற்றதாகவும், கொவிட் 19 நோய்த்தொற்று சர்வதேச பொருளாதாரத்திற்கும் இலங்கையின் பொருளாதாரத்திற்கும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியிருப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி அவர்கள் அந்நியச் செலாவணி வருமானம் பெருமளவு வீழ்ச்சியடைந்திருப்பது முக்கிய பிரச்சினையாகும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், உலக பொருளாதார வீழ்ச்சி காரணமாக ஆடைக் கைத்தொழில் மற்றும் சுற்றுலாத்துறை மூலம் கிடைக்கும் வருமானமும் இல்லாமல் போயுள்ளது. பொருளாதார வீழ்ச்சியை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்கு இன்னும் காலம் செல்லலாம். இலங்கை உற்பத்தி பொருளாதாரத்தின் அடிப்படையிலான புதிய அபிவிருத்தி மாதிரியொன்றை பின்பற்றுவதற்கு திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி அவர்கள் அதனை வெற்றிகொள்வதற்கு நட்பு நாடுகளின் உதவியை எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார். "எமது ஒரே எதிர்பார்ப்பு கடன் அல்லது நிதி உதவியை பெற்றுக்கொள்வதன்று. உற்பத்தியை அதிகரிப்பதற்கு பங்களிக்கும் வகையில் முதலீடுகளை கொண்டுவருவது முக்கிய இலக்காகும். விவசாய உற்பத்திகள் மற்றும் நிர்மாணத்துறை போன்ற பல துறைகளில் வெளிநாட்டு முதலீட்டுக்கான அநேக வாய்ப்புகள் உள்ளன. அதிலிருந்து பயன்பெறுமாறு சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி குறித்த சந்திப்பின்போது தெரிவித்திருந்தார்.

அதேவேளை, அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள், 2020 இன் முக்கிய பண்புகளும் 2021இற்கான வாய்ப்புக்களும் என்ற பிரசுரத்தை இலங்கை மத்திய வங்கி 31 ஆம் திகதி வெளியிட்டிருந்தது. இந்தப் பிரசுரத்தின்படி, கடந்த ஆண்டுகளில் உள்ளார்ந்தளவினை விடத் தாழ்ந்த வளர்ச்சியினை அனுபவித்த இலங்கைப் பொருளாதாரம் கொவிட்-19 நோய்ப்பரவலிற்கு மத்தியில் புதுப்பிக்கப்பட்ட சவால்களுக்கு முகங்கொடுத்தது. கொவிட்-19 இன் உள்நாட்டிலான பரவல் மற்றும் முடக்குதல் வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டமை, உலகளாவிய பொருளாதாரச் செயற்பாட்டின் மெதுவடைதல் மற்றும் நாட்டில் பாதகமான வானிலை நிலைமைகளின் தாக்கம் என்பவற்றின் இணைந்த தாக்கங்களையும் பிரதிபலித்து தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீட்டிற்கமைய பொருளாதாரம் 2020இன் முதற்காலாண்டில் ஆண்டிற்காண்டு அடிப்படையில் 1.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. இடையூறுகளின் உண்மைத்தன்மையினையும் உலகளாவிய நோய்ப்பரவலின் தொடக்கத்துடன் இவ்வாண்டில் தோற்றம்பெற்றுள்ள புதிய செயற்பாடுகளினையும் தொழில்புரிவதற்கான புதுமையான வழிகளையும் கைப்பற்றிக்கொள்வதிலுள்ள சிக்கல்களினை மேற்கோள்காட்டி தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் இரண்டாம் காலாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை. இருப்பினும், 2020 ஒக்டோபரில் கொவிட்-19 நோய்த்தொற்றின் புத்துயிர்ப்பிற்கும் அதன் விளைவான கட்டுப்படுத்தல் வழிமுறைகளுக்கு முன்னர் மிக அண்மிய மாதங்களில் பொருளாதாரச் செயற்பாட்டின் பல விடயப்பரப்புகளில் வலுவானதொரு மீட்சியினை துரிதமாகக் கிடைக்கக்கூடியதாகவுள்ள தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன என அந்த அறிக்கை மேலும் பல தகவல்களுடன் வெளியாகியிருந்தது.

எது எவ்வாறிருப்பினும் 2021இல் இலங்கையினது பொருளாதாரம் வளர்ச்சிப் பாதைநோக்கிப் பயணிக்கும் எனக் கூறப்பட்டபோதிலும், தற்போதுவரை இவ் இலக்கு நோக்கி இலங்கை பயணிப்பதில் முன்னேற்றம் எதனையும் காண முடியாத சூழலே ஏற்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டின் நிறைவிலும் அரசு எதிர்பார்த்த, வெளியிட்ட அறிக்கைகளின் பலனை அடைய முடியாத நிலையில் சர்வதேச நாடுகளிடமிருந்து பெருமளவில் கடன்களை பெறும் அளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளது. நாட்டில் தற்போது உணவுப்பொருட்களுக்கான தட்டுப்பாடு, விலையேற்றம் என்பவற்றால் நாட்டின் மக்கள் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளதுடன் அரசின் மீது அதிருப்தியடைந்துள்ளனர். சமையல் எரிவாயுவிற்காக வீதிகளில் நீண்ட வரிசையில் நிற்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தேவையான பொருட்களை வாங்குவதற்கு கையில் போதியளவு பணம் இல்லாமையும், அரச ஊழியர்களுக்கு சலுகைகளை வழங்குவது என அரசு அறிவித்துள்ள போதிலும் தனியார் துறையினர் பாதிப்படைந்துள்ளனர். சம்பள ஏற்றம் தொடர்பில் தனியார் துறையினருக்கான சலுகைகள் வழங்கப்படவில்லை. அத்துடன் நாளாந்தம் கூலி வேலை செய்வோர் அதிகமுள்ள எமது நாட்டில் இவர்கள் இன்று பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

ஜி.எஸ்.பி. சலுகையை இலங்கை இழக்குமாயின் தேசிய பொருளாதாரம் படு பாதாளத்தில் விழும். எனவே அரசியல் காரணிகளுக்கு அப்பால் சென்று நாட்டு மக்கள் மற்றும் நாட்டின் எதிர்காலத்தினைக் கருத்திற்கொண்டு ஐரோப்பிய ஒன்றியத்துடன் கலந்துரையாடி ஜி.எஸ்.பி சலுகையை தக்க வைத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். ஆடை தொழிற்துறை, மீன்பிடித்தொழில் என்பன இதனால் மேம்படுத்தப்பட்டன. ஆனால் இன்று ஜி.எஸ்.பி. பிளஸ் தொடர்பில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் பிரச்சினை உருவாகியுள்ளது. ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை அற்றுப்போகக்கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.


இலங்கையில் பொருளாதாரம் கடும் சரிவை சந்தித்துள்ள நிலையில், பொருளாதார அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் பொருளாதாரம், சமீப சில ஆண்டு காலமாக சிக்கலைச் சந்தித்து வருகிறது. இதனிடையே கொரோனா பெருந்தொற்று சூழலால், நாட்டின் பிரதான வருவாய்த் துறையாக விளங்கும் சுற்றுலாவில் முடக்கம் ஏற்பட்டதால் அன்னியச் செலாவணி இருப்பு குறைந்து இலங்கையின் ரூபாய் மதிப்பு வெகுவாக சரிந்திருக்கிறது. இதேவேளை இன்றைய அரசு அதிகம் சீனாவின் பக்கம் சார்ந்திருப்பதால் உள்ளூரில் சர்ச்சைகள் எழுந்துள்ளன. சீனாவிடம் கடன்களைப் பெற்று இலங்கையினது வளங்கள் சீனாவுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. அண்டை நாடான இந்தியாவுக்கும் இலங்கையில் சீனாவின் தலையீடு என்பது அரசியல் ரீதியாகவும் பௌதீக ரீதியாகவும் சிக்கல்களை தோற்றுவித்துள்ளது. மறுபக்கம் அமெரிக்கா இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க ஆரம்பித்துள்ளது. நேரடியாகவே இலங்கையினது சில இராணுவத் தளபதிகள் அமெரிக்காவுக்குள் பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளார்கள். ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் முகமாகவே செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறு இலங்கையினது பொருளாதாரம் வீழ்ச்சி நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கும் நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்திற்குள் பாரிய பிரச்சினைகள் தலையெடுக்க ஆரம்பித்துள்ளன. கடந்த காலத்தில் நாட்டு மக்கள் எவ்வாறு குடும்ப ஆட்சிக்கு முடிவுகட்டினார்களோ மீண்டும் மக்கள் மீண்டும் அவ்வாறானதொரு தீர்மானத்திற்குச் செல்லவேண்டிய நிலைக்கு வந்துள்ளார்கள். மீண்டும் குடும்ப ஆட்சி இந்நாட்டில் தலையெடுத்துள்ளது. மக்கள் அரசை வெறுக்கும் நிலைப்பாட்டிற்கு வந்துள்ளனர். ஆட்சியமைத்திருக்கும் கட்சிகளுக்கிடையில் முறுகல் நிலை உருவாகியுள்ளது. வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. பல பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசிலிருந்து விலகிச்செல்லவுள்ளதாக தென்னிலங்கை செய்திகள் வெளிவந்தவண்ணமிருக்கின்றன.

புதிதாக கூட்டணி அமைத்து செயற்பட பலர் இன்று தயாராகியுள்ளதாக கூறப்படுகிறது. இவ்வாறு நாட்டின் அரசியலுக்குள்ளும் சரி, பொருளாதாரத்திற்குள்ளும் சரி குழப்பங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் தான், திடீரென உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து சுசில் பிரேம்ஜயந்த் நீக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதனை ஜனாதிபதி ஊடகப்பிரிவு உறுதி செய்துள்ளது. கல்வி மறுசீரமைப்பு மற்றும் திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சராக சுசில் பிரேம்ஜயந்த பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் நாட்டில் மீண்டும் குழப்பங்களைத் தோற்றுவித்துள்ளது. இலங்கையின் அரசியல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. எந்தநேரமும் எதுவும் நடக்கலாம் என்கிற நிலை தான் தொடர்கின்றது. விவசாயிகள் செய்வதறியாது கையறுநிலைக்கு வந்துள்ளனர். திடீரென உர இறக்குமதிக்குத் தடை விதித்தமையானது நாட்டின் நெல் உற்பத்தியினைப் பாதித்திருக்கின்றது. அத்துடன் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையிலும் தாக்கத்தினை செலுத்தியிருக்கிறது. அரசாங்கம் ஒரு தளம்பல் போக்கினை அடைந்துள்ளது. விரைவில் அமைச்சரவையிலும் மாற்றங்கள் செய்யப்படவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு பதவிக்கு வந்த சில ஆண்டுகளிலேயே இவ் அரசாங்கம் எதிர்ப்பலைகளைச் சந்திக்க ஆரம்பித்துள்ளது. அவ்வலை இன்று உச்சமடைந்துள்ளது. கொவிட் தொற்றுக்கு மத்தியிலும் ஒமிக்ரோன் தொற்றின் பரவலும் வேகமெடுக்க ஆரம்பித்துள்ளது. இந்தியாவில் ஒருவர் இத்தொற்றினால் மரணமும் அடைந்துள்ளார். இவ்வரசினை ஆட்சிக்குக் கொண்டுவந்து பதவியில் அமர்த்தி அழகு பார்த்த சிங்கள மக்கள் இன்று விசனமடைந்துள்ளனர். அரசின் செயற்பாடுகள் தொடர்பில் மதத்தலைவர்கள் போராட்டங்களை நடத்தினர். தொழிற்சங்கங்கள் போராட்டங்களை நடத்தின. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் இவ்வாறான திடீர் தீர்மானங்களும், ஒட்டுமொத்த அரசின் செயற்பாடுகளும் ஜனாதிபதியின் அரசியல் இருப்புக்கும், நாட்டின் ஜனநாயகத்திற்கும், நிலையான பொருளாதார வளர்ச்சிக்கும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தப்போகின்றது என்பது உறுதி.

- சசிகரன் -

# தேசியம், சுயநிர்ணய உரிமையை சிதைக்க படையெடுத்துள்ள அரச புலனாய்வு ஊடகங்கள்



30 வருட கால அகிம்சை போராட்டம், 30 வருட கால ஆயுத போராட்டம் தற்பொழுது சொல்லி நிற்கும் செய்தி என்ன என்பது பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். தமிழ் மக்களுடைய அபிலாசைகளைச் சிதைக்கும் நோக்கில் பல ஊடக நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றமை கவலையளிக்கின்றது. கூலிக்கு மாறடிக்கும் ஊடகவியலாளர்கள் பலர் தற்பொழுது ஊடக நிறுவனங்களுக்கு மாறடிக்க தொடங்கி விட்டார்கள். பிறப்பில் தமிழர்களாக இருந்தும் தங்கள் வறுமையின் நிமித்தம் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கில் தேசியத்தையும் சுயநிர்ணய உரிமையையும் மலுங்கடிக்கும் நோக்கில் இவர்கள் களம் இறக்கப்பட்டிருக்கிறார்கள். பணம் சம்பாதித்தால் போதும் என்பதே இவர்களின் நோக்கம். முகநூல்களிலும் இணையத்தளங்களிலும் தமிழினத்தை தமிழரசியலை இளிவுபடுத்தி தமிழினத்தின் போராட்ட விழுமியங்களை கொச்சைப்படுத்தி செய்திகளையும் இவர்கள் வெளியிட்டு வருகிறார்கள்.

விடுதலைப்புலிகளின் அஞ்சலி நிகழ்வுகளை படம் போட்டுக் காட்டி தாங்களும் தேசியம் சார்ந்தவர்கள் என்று மக்கள் நம்புவதற்காக நாடகம் ஆடி ஊடகம் என்ற போர்வையில் நிவாரணங்கள் கொடுத்து மக்களை ஏமாற்றும் ஒரு புதிய பாணி தற்பொழுது யுத்தத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னரே இவ்வாறான ஊடகங்கள் முளைத்து வந்திருக்கின்றது. வடக்கிலும், கிழக்கிலும் இவ்வாறு முளைத்து வந்த 150 ஊடகவியலாளர்களின் பெயர் பட்டியல் எம்மிடம் இருக்கிறது.

இவர்கள் இராணுவ இரகசிய புலனாய்வுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தமது ஊடக பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இது போன்று தென்னிலங்கையிலும் 50க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் தேசியத்தை சிதைக்கும் நோக்கில் செயற்பட்டு வருகின்றார்கள். அவர்களின் நோக்கம் என்னவென்றால் தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட த.தே.கூட்டமைப்பை இல்லாதொழித்து வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் என்ற கோரிக்கைக்கு இடமில்லாத வகையில் செயற்படுத்துவது ஒரு நோக்கமாகும். இன்னும் பல விடயங்களை கூறுவதற்கு முன் மேற்குறிப்பிட்ட ஊடகவியலாளர்களிடம் கேட்க வேண்டிய கேள்விகள் சில உள்ளன.

1. வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை மாறி மாறி வந்த அரசாங்கங்கள் ஏன் நிராகரித்து வருகின்றன, ஏன் தர மறுக்கின்றன? என்று சிங்கள அரசியல் தலைவர்கள் எவரிடமாவது குறித்த ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருக்கிறார்களா?

2. கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் அதற்கான சரியான தீர்வை இதுவரையில் அரசாங்கம் ஏன் பெற்றுத்தரவில்லை? என்ற கேள்வியை அரச தரப்பு அதிகாரிகளிடம் கேட்டிருக்கிறார்களா?

3. போராட்டம் முற்றுப்பெற்று விட்டது. ஆனாலும் 11 வருடங்களை கடந்துள்ள நிலையில் விடுதலைப்புலிகள் மீது பயங்கரவாத சட்டம் பாய்ச்சப்பட்டுள்ளது. ஏனைய ஆயுத இயக்கங்கள் மீது அந்த சட்டம் பாய்ச்சப்படவில்லை. ஆகவே விடுதலைப்புலிகள் சுதந்திரமாக இந்த நாட்டில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அது தடையாக இருக்கிறது. குறித்த ஊடகவியலாளர்கள் ஒரு தமிழ் தாய்க்கு பிறந்திருந்தால் ஏன் பயங்கரவாத சட்டத்தை எடுக்க கூடாது அதை எடுதால் என்ன எடுக்கா விட்டால் நாம் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்வோம் என்று கட்டுரைகளோ விமர்சனங்களோ அரசாங்கங்களுக்கு வாக்காளத்து வாங்குகின்ற ஊடகங்கள் ஊடகவியலாளர்கள் இது பற்றி கேட்டதுண்டா?

4. 1 இலட்டத்து 40 ஆயிரம் பேர் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற முழுமையான ஆதாரங்கள் தமிழ் ஊடகவியலாளர்களின் கையில் இருக்கிறது இவற்றை தினந்தோறும் பிரபல்யம் வாய்ந்த ஊடகங்களில் போட்டுக்காட்டுவதனூடாக தவறிழைத்த இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் குறித்த அக்காலகட்டத்தில் கடைமையாற்றிய இராணுவ கட்டளை அதிகாரிகள் சர்வதேசத்தில் கண்டிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கும் அல்லவா?

5. இலங்கை நாட்டு தேசிய கொடியை ஏற்கின்றீர்களா என்று தமிழின அரசியல்வாதிகளிடம் கேட்கின்ற சிங்கள தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். சிங்களவர்கள் இந்த கேள்வியை கேட்பதில் நியாயம் உண்டு. ஒரு தமிழனாய் பிறந்த ஊடகவியலாளராய் பிறந்த நீங்கள் தேசியக் கொடியில் குறிப்பிடப்படும் சின்னங்கள் அதன் நிறங்கள் தமிழினத்தை ஒரு சிறுபான்மை இனமாக சித்தரித்து அடிமையான வாழ்வை வாழ்வதையே எடுத்துக்காட்டும் விதமாக அமைகிறது. இதனை தட்டிக்கேட்டு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவிடமாவது அல்லது பிரதமர் மகிந்த ராஜபக்சவிடமாவது நேரடி நேர்காணலை நடத்தியிருக்கிறீர்களா? இது தொடர்பில் பௌத்த துறவிகள் இன துவேசத்தை கக்குகின்றார்களே இவர்களை எச்சரிக்கும் வகையில் தமிழ் ஊடகங்கள் நடந்திருக்கின்றனவா?

6. குறித்த தமிழ் ஊடகங்கள் ஊடகவியலாளர்கள் பணி புரிவது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இதுவரையில் எமது இன விடுதலைக்காக பேனா முனைகளில் போராடிய 35 ஊடகவியலாளர்கள் ஊடக அடக்கு முறையினால் மரணத்தை தழுவிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தேசியம் சுயநிர்ணய உரிமையை நேசித்தவர்கள். ஊடக தணிக்கையை அரசாங்கம் ஏற்படுத்திவிட்டே இந்த போரை முடிவிற்கு கொண்டு வந்தது. குறித்த ஊடகவியலாளர்களுக்கு வேண்டிய நியாயத்தை கூட உங்களால் பெற்றுக்கொடுக்கமுடியவில்லை.

ஆனால் இது பற்றி குரல் கொடுக்கின்ற ஊடகவியலாளர்களையும் ஊடக பணிப்பாளர்களையும் 4 ஆம் மாடிக்கு அழைத்து விசாரணை செய்த பொழுதும் குறித்த ஊடகங்கள் மௌனம் காத்து வந்தன. தொடர்ந்தும் இது தொடர்பான அழுத்தங்களை கொடுப்பதில்லை ஆனால் த.தே.கூ பாராளுமன்ற உறுப்பினர்களைத் தான் துருவி துருவி அரசாங்கத்துடன் மோத வைக்கின்ற கேள்விகளை தொடுத்து இனவாத்தை தூண்டுகின்ற கேள்விகளை தொடுத்து மீண்டுமொரு ஆயுத போராட்டத்தை இந்த நாட்டில் உருவாக்க குறித்த ஊடகவியலாளர்கள் முற்படுகின்றார்களா என்ற சந்தேகத்தை தோற்றுவிக்கின்றது. போர் உச்சகட்டம் இடம் பெறுகின்ற காலப்பகுதியில் வெறிட்டாஸ் வானொலியை தவிர எந்தவொரு ஊடகத்தையும் கேட்டு அதனை உண்மை என நம்பியது இல்லை.

ஒரு தமிழினத்தை பார்த்து ஆயுத போராட்டத்தை ஏற்றுக்கொள்கின்றீர்களா என்று ஒரு சிங்களவன் கேட்கலாம் அது தவறில்லை ஆனால் ஒரு தமிழனே இதைப் பற்றிகேட்கும்பொழுது இந்த போராட்டத்தின் தன்மை அறியாத ஒருவராக இருக்கின்றார் என்று பொருளல்ல. தெரிந்தும் கொழுவி விட்டு கூத்துப்பார்ப்பதற்காக அதனை கேட்கின்றார்.

7. மாற்றுத் தலைமை என்ற ஒன்று தேவையென்றால் அகிம்சை ரீதியில் உருவாக்கப்பட்ட தமிழரசுக் கட்சி ஒரு அணியாகவும் ஆயுத போரட்டத்தினூடாக வந்த மற்றுமொரு ஆயுத போராட்ட வீரர்கள் தனியாகவும் ஒரு மாற்று அணியை உருவாக்கலாம். அல்லது மாற்று அணியை பற்றி பேசலாம் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்களும் இராணுவ அரச புலனாய்வுகளுடன் சேர்ந்து கூட்டமைப்பை பிளவுபடுத்துபவர்களும் மாற்று அணி வேண்டும் என்று கூறி நிற்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. இதனை மக்கள் அறிவார்கள். தற்பொழுது மகிந்த அவர்கள் ஈழக்கோரிக்கை சாத்தியம் அற்றது. தனி நாட்டு கோரிக்கை சாத்தியமற்றது என்று கூறியிருக்கிறார். இதற்காக பிரபல்யம் வாய்ந்த ஊடகவியலாளர்களே அரசாங்கத்துடன் மோதி செய்திகளை எழுதுவதற்கு நீங்கள் தயாரா?

8. தேசியம் சுயநிர்ணய உரிமையை குழப்புகின்ற நடவடிக்கைகளில் ஏன் நீங்கள் களமிறங்கியிருக்கின்றீர்கள் என்ற சந்தேகம் தற்பொழுது வலுப்பெற்றுள்ளது. காலத்துக்கு காலம் அல்லது 10 வருடங்களுக்கு ஒரு முறை ஆட்சிகளில் மாற்றம் ஏற்படுவது வழக்கம். ஆகவே தமிழ் மக்கள் ஆகிய நாம் தமிழினமாகிய நாம் சிந்தித்து செயற்பட வேண்டிய தேவை எமக்கிருக்கிறது. குறித்த பிரபல்யம் வாய்ந்த கொழும்பு ஊடகம் ஒன்று த.தே.கூ தலைவர் இரா. சம்மந்தன் அவர்களை சுமந்திரனை மடக்கியது போன்று மடக்கலாம் என்று கேள்விகளை சரமாறியாக தொடுத்தது.

அரசியலில் சிறந்த சானக்கியன் என்று கூறப்படும் சம்மந்தன் அவர்கள் சிறந்த பதலளித்தார். போராட்டம் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? என்ற கேள்வியும் கேட்கப்பட்டது. ஆயுத போராட்டம் பற்றி தெளிவில்லாத ஒருவரா அந்த கேள்வி கேட்ட அனுப்பப்பட்டார் தேசிய கொடி பற்றி கேள்வி கேட்டதிலும் தமிழ் மக்களுக்கான தீர்வுக்கும் என்ன சம்மந்தம் இருக்கிறது? தேசியக் கொடி பிரச்சனை மூன்று சதாப்தங்களுக்கு மேல் எழுப்பப்பட்ட பிரச்சனை.

குறிப்பாக தேசியம் சுயநிர்ணய உரிமை பொலிஸ் காணி அதிகாரம், காணி விடுவிப்பு, இனப்படுகொலைக்கான நீதி, அதிகார பரவலாக்கல், வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் போன்ற பிரச்சனைகளில் தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுத்தர மாறி மாறி வந்த எந்த அரசாங்கங்களும் சம்மதிக்கவில்லை. இவர்கள் போர் சமாதானம் என்று காலத்தை இழுத்தடித்து ஆயுதம் ஏந்தி போராடியவர்களின் போராட்டங்களை மலுங்கடித்து தற்பொழுது அரசியலில் எந்த தீர்வும் இல்லையென்று தமிழினத்தை கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள்.

அகிம்சை ரீதியாக பேசுகின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பே அதற்கு சரிவரவில்லை என்றால் அடுத்த நகர்வு என்ன என்பது பற்றியும் குறித்த ஊடகவியலாளர்களுக்கு தெரிய வேண்டும். பேனா முனை என்பது மிக கூர்மையானது அதனூடாக பல சாதனைகளை சாதிக்க முடியும். ஆகவே தமிழ் பேசுகின்ற ஊடகவியலாளர்களாகிய நாம் தமிழ் பற்றுள்ளவர்களாக தமிழ் தேசியத்தை சுயநிர்ணய உரிமையை குழிதோண்டி புதைக்காத வகையில் எமக்கு தீர்வை பெற்றுத்தர விருப்பமில்லாத சிங்கள இனவாதிகள் பலர் இருக்கின்றார்கள்.

சிங்கள சமூதாயத்தில் நல்லவர்களும் இருக்கிறார்கள் அவர்களிடத்தில் சென்று தமிழ் மக்களின் போராட்டம் பற்றிய விளிப்புணர்வுகளை குறித்த ஊடகவியலாளர்கள் மேற்கொள்வது அத்தியாவசியம். எமக்கான உரிமையை நாங்களே பெற்றுக்கொள்ள வேண்டும். அதில் ஒரு விடயத்தை கூற விரும்புகின்றோம். என்னவென்றால் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட த.தே.கூட்டமைப்பின் பேச்சாளராக இருக்கும் சுமந்திரன் அவர்கள் தொடர்ந்தும் பேச்சாளராக இருப்பதற்கு தகுதியற்றவர். அவர் தமிழரசு கட்சியில் பேச்சாளராக இருப்பதற்கு தகுதியுடையவராக இருக்கலாம். ஆயுதம் ஏந்தி போராடியவர்களை இழிவுபடுத்துகின்ற ஒரு நேர்காணலாகவே குறித்த நேர்காணல் பார்க்கப்படுகிறது.

ஆகவே தமிழ் பேசும் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் குழம்பிக்கொள்ள வேண்டிய தேவையில்லை. காலப்போக்கில் அரசாங்கம் ஒட்டுமொத்த தமிழினத்தையே அடிமை வழிக்கு இட்டுச்செல்லும் விளிப்புணர்வுடன் செயற்பட வேண்டியது அவசியம் என்பதையே நான் கூற விரும்புகின்றேன்.

**இரணியன்**

# சர்வதேச அரசியல் வலைப்பின்னலில் மீண்டும் சிக்கப்போகின்றதா தமிழினம்

இன்றைய யதார்த்தபூர்வ அரசியல் யுத்தம் முடிவுற்று 30 ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் தமிழினப் போராட்டத்திற்கான தீர்வு கிடைக்கும் என்று பல்வேறு தரப்பட்ட முயற்சிகளை தமிழ்த் தரப்பு எடுத்துவருகிறது. நம்பிக்கை அடிப்படையில் சாத்தியமாகுமா இல்லையா என்றால் அது ஒரு புதிராகவே இருக்கிறது. ஆனாலும் தமிழ்க் கட்சிகளுடைய ஒற்றுமை என்பது அதற்கான வழிகளை வகுக்கும் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை.

உள்ளகப்பொறிமுறையின் மூலம் தமிழ் மக்களுக்கானத் தீர்வு என்பதும், சர்வதேசத்தின் மூலமான தீர்வு என்பதும் அல்லது இந்தியாவின் மாகாண சபை முறைமை என்பதும், 13க்கும் அப்பால் சென்று செயற்படுவது என்பது பற்றியதானப் பேச்சுக்களே தற்போது இன்றைய அரசியல் பரம்பில் வலம் வருகின்ற செய்திகளாகும்.

சுயலாப நோக்கத்தோடு இயங்கிவருகின்ற சர்வதேச அரசியல் இயந்திரங்கள் தமது வர்த்தக நலனை இலங்கைத் தீவில் நெறிப்படுத்துவதற்காக முயற்சிகளை மேற்கொண்டு அதற்கான வெற்றி இலக்கையும் அடைந்துள்ளது. குறிப்பாக இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் தங்களது சுயலாப அரசியலை இலங்கை அரசாங்கத்தோடு செய்துகொள்கின்ற அதேநேரம் தமிழ் மக்களுக்கானத் தீர்வுத்திட்டம் என்கிற விடயத்தில் அக்கறைகொள்ளவில்லை என்பதையே இன்றைய சமகால அரசியல் எடுத்துக்காட்டுகின்றது.

சர்வதேச அரங்கில் ஓர் போர் நிகழுமாகவிருந்தால் ஆசியப் பசுபிக் பிராந்தியத்தில் அனைத்து நாடுகளையும் எதிர்கொள்வதற்கு இலங்கைத் திருநாடு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த அரணாக அமைந்துள்ளது. மிக முக்கியமாக இதற்குத் திருகோணமலைத் துறைமுகத்தினைக் குறிப்பிடலாம். தமிழ் மக்களது ஆயுதப்போராட்டம் சர்வதேச ரீதியாக தற்போது வரை சாதித்தது என்ன என்கிற கேள்வி பலராலும் எழுப்பப்படுகின்றது. உண்மைதான்.

இந்த நாட்டில் யுத்தம் எனக்கூறி புலம்பெயர்ந்த நாடுகளில் தஞ்சமடைந்து அங்கு தொழில்புரிகின்ற மக்கள் ஒருபுறம். அதனால் கிடைக்கப்பெற்ற நன்மைகள். மறுபக்கத்தில் இந்தியாவில் அகதிகளாக தஞ்சமடைந்திருந்த அகதிகள் மீளவும் இலங்கைக்கு வருகின்றதொரு சூழல். இலங்கையில் இருப்பவர்கள் எப்பாகத்திற்கும் சென்றுவரக்கூடிய ஒரு நிலைப்பாடு. பொதுவாகக் கூறப்போனால் தீர்வுத்திட்டம் என்கிற விடயத்தில் திம்பு முதல் டோக்கியோ வரையான பேச்சுக்கள், இறுதியாக எடுக்கப்பட்ட ஒஸ்லோ தீர்மானங்கள், நோர்வேயின் தலையீட்டில் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச பேச்சுக்கள், உலக வங்கி உட்பட பல நாடுகள் சமாதான முயற்சியில் ஈடுபட்டு இறுதியில் கைகூடாமல் போனவை. ஐ.நா சபையில் பதவியில் இருந்த செயலாளர்களான கொபி அனான், பான் கீ மூன், செயிட் அல் ஹுசைன், தற்போதைய செயலாளர் அந்தோனியோ குட்டேரஸ் அத்துடன் மனித உரிமை ஆணையாளர்களான நவநீதம் பிள்ளை, தற்போதைய மிச்செல் பச்லெட், உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பின் தலைவர் யஸ்மின் சூக்கா போன்றோர் இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டும், தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வுவேண்டும். இலங்கையரசு இந்த நாட்டில் இனப்படுகொலையினை நடத்தியிருக்கிறது. அதற்கான ஒரு தீர்வுவேண்டும் என்று பலமுறை குரல்கொடுத்தும் ஐ.நா சபை பல நிபந்தனைகளை வைத்தும் அதற்கு நாம் அடிபணியப்போவதில்லை என்ற நிலைப்பாட்டிலேயே இலங்கையரசு இதுவரை செயற்பட்டு வருகிறது.

அந்த வகையில் பார்க்கின்றபோது ஜனநாயகத்தை இலங்கை மீறியிருப்பது புலப்படுகின்றது. சர்வதேச அரங்கில் தமிழ் மக்களுக்கான தீர்வு எட்டப்படாதவரையில் குறித்த சர்வதேச நாடுகள் குழப்பங்களை விளைவித்துக்கொண்டிருக்கிறது.

அரசியல் ராஜதந்திர நகர்வுகள் என்கிற போர்வையில் இலங்கைக்கு விஜயம் செய்கின்ற ஒவ்வொரு நாடுகளும் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளையும், தொல்பொருள் ஆராய்ச்சி என்கிற பெயரில் அதனைப் பார்வையிட்டு, கையகப்படுத்துவதற்கான வியூகங்களை வகுத்து வருகின்றார்கள். தற்பொழுது சர்வதேச அரங்கிலும் தமிழ் மக்களுக்கான தீர்வுதிட்ட விடயங்களில் அழுத்தங்கள் குறைந்து வருகின்றது. இலங்கை அரசாங்கம் தனது செல்வாக்கை செலுத்துவதற்காக தமிழ் - முஸ்லீம் புத்திஜீவிகளுக்கு பதவிகளை வழங்கி அல்லது தேசியப் பட்டியலில் பாராளுமன்றம் வரை அழைத்து, நாம் தமிழினத்தை சரியான பாதையில் கொண்டுசெல்கின்றோம் எனவும் அவர்கள் சரிக்கு சமனாக பாராளுமன்றில் அங்கம் வகிக்கின்றார்கள் என்றும் இவர்கள் மூலமாக தமிழ் மக்களது தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றது எனவும் தற்போதைய அரசு நாடகமாடுகின்றது.

முஸ்லீம்களின் கலை கலாச்சாரத்தினை பாதுகாக்கின்றோம் எனக்கூறுகின்ற அதேநேரம் அவர்களுக்கு எதிராக வன்முறைகளை யுத்தத்திற்குப் பின்னர் இலங்கையரசு கட்டவிழ்த்துவிட்டுள்ளது. சர்வதேச நாடுகள் முஸ்லீம் விவகாரத்தில் தலையிடாது மௌனம் காத்திருப்பதும், இலங்கையை கண்டிக்காதிருப்பதும் வேடிக்கையானது. ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் ஐ.நாவின் தலைமையின் ஊடாக போரை நிறுத்தி





உயிரிழப்புக்களை மட்டுப்படுத்த முடியும் என்கின்ற நிலைப்பாடும் இருந்த ஒரு காலகட்டத்தில், அதனைக் குழப்பும் நோக்கில் மஹிந்த ராஜபக்சவின் அரசு அப்பாவி பொதுமக்களையும், விடுதலைப்புலிகள் எனக்கூறிக் கொலை செய்தது. கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அப்போது கண்டிராத சர்வதேசம் தற்பொழுது குற்றவாளிக்கூண்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் இராணுவத்தினரை கூண்டில் நிறுத்த வேண்டும் எனக்கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம் என்னவெனில் இனப்படுகொலை என்பது ஜூலை 83க்கு முன்னரே இலங்கையில் இடம்பெற்ற வந்த ஒன்று. அதனது வீரியம் என்பதுதான் 83 ஜூலைக் கலவரம். இக்கலவரத்தில் பாதிக்கப்பட்டோரை விசாரித்தால் நடந்த உண்மைச் சம்பவங்கள் பல வெளிச்சத்திற்கு வரும். குமுதினிப் படுகொலை தொடக்கம் சத்துருக்கொண்டான் படுகொலை வரை 244 படுகொலைகளை வரிசைப்படுத்தி கூறிக்கொண்டே போகலாம். இவை எம் கண்ணுக்கு எட்டியவை மாத்திரமே.

சர்வதேச நாடுகளின் தலையீடு இன்றி தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது என்கின்ற கருத்தாடல்களும் இருக்கின்றன. மிக முக்கியமாக இந்தியாவின் தலையீடின்றி இலங்கைக்கான தீர்வு கிடைக்கப்போவதில்லை என்பது அரசியல் ஆய்வாளர்களின் கருத்து. ஆனால் இன்றைய காலகட்டத்தில் இலங்கையை ஆதரித்து சீன அரசாங்கம் பல த்ரில்லியன் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது. இன்னமும் வழங்கக் காத்திருக்கின்றது. அதுமட்டுமன்றி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பல பிரதேசங்கள் சீனாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. குறித்த கடனை செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் இலங்கையின் பல பாகங்களை விற்கவேண்டிய நிலைமை அரசுக்கு ஏற்படலாம். இதனால் இலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிதி நெருக்கடி என்பது இலங்கையை மென்மேலும் பின்படுத்துகின்ற ஒரு விடயமாகும். இனவாதக் கருத்துக்களை விதைக்கின்ற இலங்கையரசின் அடிவருடிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை குழப்பிவந்தது வரலாறு. தொடர்ந்தும் அவர்கள் அதனையே செய்து வருகின்றார்கள். தற்போதைய சூழ்நிலையில் அரச தரப்பினால் நில ஆக்கிரமிப்புக்கள் வடகிழக்கில் தொடர்கின்றது. இதன் காரணமாக தமிழ் மக்களின் அன்றாட பிரச்சினைகளைக் கூட தீர்க்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

சர்வதேச நாடுகளின் தலையீடு என்பது அவர்கள் முழுமையாக தமிழ் மக்களுக்கானத் தீர்வினை பெற்றுக்கொடுக்கும் நோக்கமல்ல. குறிப்பாக இந்தியாவை நம்பி களமிறங்கியிருக்கின்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியான ரெலோ தற்போது ஒரு முயற்சியைக் கையிலெடுத்துள்ளது. இது கைகூடுமா இல்லையா என்பது ஒரு புறமிருந்தாலும், 13 ஐ குழப்பவேண்டிய அவசியம் சிங்கள அரசுக்கு உண்டு. உண்மையிலேயேதமிழ்மக்களது அரசியல் உரிமைகளின் மீது அக்கறையிருந்தால் அரசு 13 ஐ எதிர்க்கவேண்டிய அவசியம் இல்லை. அது மாத்திரமன்றி முஸ்லீம் தரப்பில் இருக்கக்கூடிய 6 பாராளுமன்ற உறுப்பினர்களும்அதனை எதிர்த்துவருவது என்பது இவர்களும் அரசுடன் இணைந்து இதனைக் குழப்புகின்றார்களா என்கிற சந்தேகம் தற்போது வலுப்பெற்றுள்ளது.

30 ஆண்டு காலங்களாக தீர்க்கப்படாத பிரச்சினை என்பது ஆயுதப்போராட்டம் வலுவாகவிருந்த காலகட்டம். தொடர்ந்தும் அரசு அதே சாக்குப்போக்குகளை கூறிவருவதும், சர்வதேச நாடுகளின் தலையீடின்றி உள்ளகப் பொறிமுறைகளின் மூலமாகத் தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறுவதும் எவ்வளவு தூரம் சாத்தியம் என்றால் அது கேள்விக்குறிதான்.

ஆகவே தமிழ்த் தலைமைகள் சர்வதேச நாடுகளின் தலையீடின்றி தமது சுயபுத்தியுடன் செயற்படுவார்களாகவிருந்தால் வட கிழக்கில் அதிகூடிய ஆசனங்களைப் பெற்று தேர்தலில் வெற்றிபெற்று, அரசாங்கத்தினை எதிர்த்து அஹிம்சை ரீதியிலான போராட்டங்களின் மூலமாக எமக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ள ஏதுவான விடயமாக அமையும். மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும் என்றார் தியாகி திலீபன். அதுவே அன்றும் இன்றும் என்றும் பொருந்தக்கூடிய ஒரு விடயமாகும். அதனைவிடுத்து தொடர்ந்தும் எதிர்பரசியலைச் செய்துகொண்டிருப்பதால் எதனையும் சாதிக்க முடியாது. சர்வதேச நாடுகள் தமிழ் மக்களுக்கு தீர்வு பெற்றுத்தரும், ஆட்சிமாற்றம் தீர்வினைப் பெற்றுத்தரும் என்றெல்லாம் கூறிக்கூறியே காலங்கள் வேகமாகவும் வீணாகவும் உருண்டோடிவிட்டது.

தொடர்ந்தும் இந்நிலை தொடர்ந்தால் தமிழினம் தமது இனத்தினை பாதுகாக்கவேண்டிய அனைத்து முயற்சிகளும் தோல்வியில் தான் முடிவடையும். ஆகவே அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்கிற பழமொழிக்கு அமைய தமிழினத்தின் அரசியல் செயற்பாடுகள் அமைபெறுவது இன்றைய அரசியலில் இன்றியமையாததொன்று.

**இரணியன்**

# கிழக்கில் தமிழர் நிலபரப்பை அபகரிக்கத்துடிக்கும் முஸ்லிம் அரசியல்தலைமைகள் -வியாழேந்திரன் அதிரடி



வசந்தம் டீ.வி நடாத்துகின்ற கடந்த தீர்வு நிகழ்ச்சியிலே 2 மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள் ஒருவர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்கள். அடுத்து எங்களுடைய இன்னுமொரு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ நஷீர் அகமட் அவர்களும் கலந்துகொண்டார்கள். அந்த நேரத்திலே கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஷீர் அகமட் அவர்கள் இரண்டு விதமான கருத்துக்களை கூறியிருந்தார். ஒன்று மட்டக்களப்பு மாவட்ட அரச நிர்வாகத்தை மாவட்ட செயலகத்தை செயலக உத்தியோகஸ்தர்களை நிர்வாக பயங்கரவாதம் என்ற பதத்தை பாவித்து மிக மோசமானமுறையிலேபலகுற்றச்சாட்டுக்களை முன்வைத்து சாடியிருந்தார். இரண்டாவது கோறளைப்பற்று வடக்கு, கோறளைப்பற்று கிழக்கு அதுபோன்று கோறளைப்பற்று தெற்கு, ஏறாவூர் நகர், காத்தான்குடி போன்ற பிரதேசங்கள் தொடர்பாகவும் தன்னுடைய கருத்துக்களை பதிவு செய்துள்ளார்.

உங்களுக்கு நான் முதலாவதாக எனது கண்டனத்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் தொடக்கம் உதவி அரசாங்க அதிபர் பிரதேச செயலாளர் உட்பட பலரை அவர் ஒரு நிர்வாக பயங்கரவாதத்தை மேற்கொள்வதாக கூறியிருந்தது மிகவும் கண்டிக்கத்தக்க விடயம். அத்தோடு அந்த விடயத்திலே அவர் பகீரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும் நிச்சயமாக இது அரச நிர்வாகத்தில் இருக்கின்ற அனைவரையுமே மிகவும் சங்கடத்திற்கு உள்ளாக்கிய வேதனைக்குள்ளாக்கிய ஒரு துன்பமான சம்பவமாக நான் பார்க்கின்றேன். அவர் பாராளுமன்றத்தில் கூட இந்த நிர்வாக பயங்கரவாதம் என்பதனை கூறியிருந்தார் அதை தொடர்ந்து ஒரு பொது வெளியிலே அதுவும் குறிப்பாக இலங்கை திருநாட்டிலே வசந்தம் டீவியின் ஒரு நிகழ்ச்சியிலே அனைவரும் பார்க்கத்தக்க அந்த வார்த்தைப் பிரயோகங்களை ஒன்றுக்கு பலதடவைகள் கூறியிருந்தார். உங்களுக்கு தெரியும் அதாவது சொல்லுகின்ற விடயத்திலே கச்சேரியில் காணியை பறித்து சட்டவிரோதமாக வைத்துள்ளார்கள். முழுக்க முழுக்க காணிகளை களவெடுக்கின்ற முஸ்லிம்களுக்கு காணிகளை கொடுக்க கூடாது என்று நினைக்கின்ற நவரூபரஞ்சினி என்ற உதவி அரசாங்க அதிபரை பெயர் சொல்லி அவர் முழுக்க முழுக்க காணிகளை களவெடுக்கின்ற முஸ்லிம்களுக்கு காணிகளை கொடுக்க கூடாது என நினைக்கின்ற ஒருவர் என்று அவரை ஒரு நிர்வாக பயங்கரவாதியாகவும் சுட்டிக்காட்டியிருப்பது மிகவும் வேதனையான விடயம்.

நான் ஒரு விடயத்தை உங்களுக்கு கூற விரும்புகின்றேன். 2018ஆம்ஆண்டுஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி தான் உதவி பிரதேச செயலாளராக இருந்த திருமதி. நவரூபரஞ்சினி அவர்கள் மாவட்ட மேலதிகாரியாக இருந்தார். ஆனால் அவர் கூறுகின்ற பொழுது சுமார் 12 வருடங்களாக அவர் இவ்வாறான வேலைகளிலே கச்சேரியில் ஈடுபடுகின்றார் என்று குறிப்பிடுகின்றார். உண்மையில் அது வன்மையாக கண்டிக்கத்தக்க விடயம். அவர் எந்த இனவாதமும் மதவாதமும் இல்லாது செயற்படுகின்ற ஒரு உதவி அரசாங்க அதிபர். அத்தோடு அரசாங்க அதிபர் தொடக்கம் மாவட்டசெயலக உத்தியோகஸ்தர்கள் பற்றி கதைக்கின்ற பொழுது அவர்கள் அடித்து விரட்டி களவெடுத்த காணி என்று கூறியிருந்தார். இது எந்தளவு மோசமானதொரு பதம். அரச நிர்வாகத்தை எந்த பாரபட்சமும் இல்லாமல் மேற்கொள்ளுகின்ற மாவட்ட அரசாங்க அதிபர் தொடக்கம் மாவட்ட செயலக உத்தியோகஸ்தர்களை இவ்வாறு குறிப்பிட்டிருப்பது என்பது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு விடயமாக பார்க்கின்றேன்.

அதுமட்டுமல்ல குறிப்பிட்டு சொன்னால் பிரதேச செயலாளர் முசமின் அவர்களுடைய இடமாற்றம் பற்றி அவர் பேசினார். பிரதேச செயலாளர் முசமின் அவர்கள் 12 வருடங்கள் வேலை செய்ததனால் உடனடியாக அவரை மாவட்டத்தை விட்டு இடமாற்ற நினைக்கின்றார்கள் என்று கூறும் பொழுது ஊடகவியலாளர்களிடம் ஒரு விடயத்தை கூறுகின்றார் மாவட்ட செயலாளர்கள் யாரையும் தூக்கிவிடுவார்கள் உங்களையும் தூக்கிவிடக்கூடியவர்கள் என்று அந்த இடத்திலே அவ்வாறான வார்த்தைப் பிரயோகங்களை பார்க்க கூடியதாக இருந்தது. உண்மையிலே 12 வருடங்களுக்கு மேல் அவர் சில பிரதேச செயலாளர்களை சுட்டி கேட்டிருந்தார். மட்டக்களப்பு மாவட்டத்திலே 12 வருடங்களுக்கும் மேல் சில தமிழ் பிரதேச செயலாளர்கள் இருக்கின்றார்கள் அவர்கள் இடமாற்றப்படவில்லை ஆனால் முசமின் இடமாற்றப்பட்டார். இடமாற்றுவதற்கான வேலைகளை அரசாங்கம் மேற்கொள்வதாக கூறினார். அவர் ஒருவிடயத்தை கூறுகின்ற பொழுது கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் திரு. ராஜ்பாபு அவர்களை குறிப்பிட்டிருந்தார். அத்தோடு ஏனைய பிரதேச செயலாளர்களையும் குறிப்பிட்டிருந்தார். போரளைப்பற்று திருமதி. தட்சனாகொரி அம்மணி மண்முனை தென்மேற்கு குறிப்பிட்டிருந்தார். போரளைப்பற்று வெள்ளாவெளி செல்வி. ராவுநாயகி அம்மணி பற்றி குறிப்பிட்டிருந்தார். அதுமட்டுமல்ல காத்தான்குடி பிரதேச செயலாளர் முகேஸ் அவர்களைப்பற்றி குறிப்பிட்டிருந்தார். நான் ஒருவிடயத்தை குறிப்பிடுகின்றேன். உண்மையிலே இவர் தகவல்களை அறிந்துகொண்டு பேசவேண்டும்.

திரு. ராஜ்பாபுவை எடுத்துக்கொண்டார் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்திலே ஒரு சிறப்பாக நிர்வாகத்தை நடத்திவரும் ஒருவர் அவர் 12 வருடங்களாக பிரதேச செயலாளராக இருக்கவில்லை. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஷீர் அவர்கள் இதை அறிந்துகொண்டு பேசியிருக்க வேண்டும். ஹாபிஸ் நஷீர் அவர்கள் இதை அறிந்துகொள்ளாது 12 வருடங்கள் ராஜ்பாபு இருப்பதாக கூறினார். கல்லிச்சை பிரச்சனைக்குள் பிரதேச செயலாளரை உட்படுத்த வேண்டும் இதற்கு உடந்தையாக இருக்கின்றார் என காட்டுவதற்காக அந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. ஆனால் உண்மையில் உங்களுக்கு தெரியும் 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் திகதி தான் பிரதேச செயலாளராக திரு. ராஜ்பாவுவை தேர்ந்தெடுத்தார்கள். அவர் 12 வருடங்கள் பிரதேச செயலாளராக இருக்கவில்லை. 2018, 2019, 2020, 2021 கிட்டத்தட்ட 4 வருடங்கள் தான் பிரதேச செயலாளராக அவர் இருக்கின்றார். ஆனால் அவர் தொடர்ச்சியாக கல்லிச்சை, வாகனேரியில் நடக்கின்ற பிரச்சனைகளில் அவர் தலையிடுகின்றார் என அவருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்களை கடந்த காலம் முதல் முன்வைத்து வருகின்றார்கள் அதிலே.

ஆகவே இந்த தகவல்களை ஒரு பொறுப்பு வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர் அறிந்துபேச வேண்டும். 12 வருடங்கள் முசமின் அவர்கள் இருக்கின்றார் என்றால் அது திட்டமிட்டு மாவட்ட செயலகத்தால் தான் பலிவாங்கப்படுகின்றார் என்பதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. வாகனேரியில் முசமின் அவர்கள் இருப்பது முஸ்லிம் மக்கள் கூடுதலாக செறிந்து வாழுகின்ற பிரதேச பிரிவு. ஆகவே அரசாங்க அதிபருக்கோ ஏனையவர்களுக்கோ அவரை அதிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற எந்த கடப்பாடும் இல்லை. இதனை நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். இதையெல்லாம் நாங்கள் இனவாத கண்ணோட்டத்துடன் பேசுவது என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது. உண்மைக்கு புறம்பான விடயங்களை பேசுவது மிகவும் வேதனைக்குரிய விடயம்.

அத்துடன் இன்னுமொரு விடயத்தை கூற விரும்புகின்றேன். உங்களுக்கு தெரியும் கோரளைப்பற்று மத்தி பற்றி பேசும் பொழுது இந்த கோரளைப்பற்று மத்தி என்ற பிரதேச செயலகம் ஓட்டமாவடி பிரதேச செயலக பிரிவில் கோரளைப்பற்று மத்தி வருகின்றது. அதாவது வாழைச்சேனையில் கோரளைப்பற்றில் இருந்த 7 கிராமசேவைப் பிரிவுகளையும் கோரளைப்பற்று மேற்கில் இருந்த கிராமசேவைப் பிரிவையும் சேர்த்து தான் 8 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கி கோரளைப்பற்று மத்தி வந்தது. ஆனால் இந்த பன்னம்பலான என்று சொல்லப்படும் ஆணைக்குழுவின் அறிக்கை 1999ஆம் ஆண்டு சந்திரிக்கா அமையார் காலத்தில் கொண்டுவரப்பட்ட இந்த பன்னம்பலான ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக அந்த நேரம் இருந்த மறைந்த முன்னாள் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் 2000ஆம் ஆண்டு யூன் மாதம் 13ஆம் திகதி அஷ்ரப் அவர்கள் இது தொடர்பான ஒன்றையும் கொண்டுவந்தார். ஆனால் அந்த காலப்பகுதிகளில் கோரளைப்பற்று தெற்கு உருவாக்கப்பட்டது அது 18 கிராமசேவைப்பரிவு, அதே நேரம் கோரளைப்பற்று மத்தி 8 கிராமசேவைப் பரிவுகளுடன் உருவாக்கப்படுகின்றது. அதில் 3 பன்னம்பலான அறிக்கை என்பது எப்பொழுது நடந்தது. 1999களில் யுத்தம் நடந்துகொண்டிருந்த காலகட்டம் மிக ஆபத்தான ஒரு காலகட்டம். அந்த நேரத்தில் ஆளும் தரப்பில் அதிகாரமிக்கவர்களாக, அமைச்சர்களாக முஸ்லிம் அரசியல்வாதிகள் இருந்த காலகட்டம் அந்த நேரத்தில் தமிழ் அரசியல்வாதிகள் அல்லது நிர்வாகம் சார்ந்தவர்கள் பேசுவதற்கே பயப்படுகின்ற ஒரு காலகட்டம். அடுத்தது மட்டக்களப்பு மாவட்ட அரச நிர்வாகம் முழுவதும் சிவில் நிர்வாகத்திற்குள் இருந்தது அந்த நேரங்களில் வாய் திறந்து பேசுவது என்பது ஒரு சவாலான விடயமாகத்தான் இருந்தது. எனவே அந்த நேரத்தில் அரசியல் அதிகாரம் என்பது அவருக்கு இருக்கவில்லை. அந்த நேரத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களுடைய அதிகாரத்தை தாங்கள் அரசாங்கத்தில் இருந்த செல்வாக்கை வைத்துக்கொண்டு இவ்வாறான விடயங்களை வேகவேகமாக நிறைவேற்றிக்கொண்டது ஒன்று தான் இந்த பன்னம்பலான என்ற அறிக்கை அதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் அவர்கள் கூறுவது போல் பாராளுமன்றத்திலும் முஸ்லிம் காங்கிரஸின் தற்போதைய தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் பேசியிருக்கின்றார். உண்மையில் அந்த நேரத்தில் நான் அந்த இடத்தில் இருக்கவில்லை. இருந்திருந்தால் அவருக்கு நான் சரியான பதிலை வழங்கியிருப்பேன். நிச்சயமாக எதிர்வரும் பாராளுமன்ற அமர்வுகளிலும், ஊடக சந்திப்புக்களிலும் இதற்கான பதில்களை நான் அவருக்கு வழங்க தயாராக இருக்கின்றேன். ஏனென்றால் கோரளைப்பற்று மத்தியில் புனான ஈஸ்ட் வருகின்றது. அதாவது கோரளைப்பற்று மத்தியில் 3 கிராமசேவகர் பிரிவு வரவேண்டும் என்று சொல்கின்றார்கள் பன்னம்பல அறிக்கை படி. புனான ஈஸ்ட். விஜிதர. காரமுன. புனான ஈஸ்ட் 240 சதுர கிலோமீற்றர். ஏற்கனவே கோரளைப்பற்று வடக்கு வாகனேரி பிரதேச பிரிவுக்குள் புனான ஈஸ்ட் இருந்த பகுதிகள் கெசட் பன்னப்பட்டு கோரளைப்பற்று வடக்கு வாகனேரி பகுதிக்குள் அதன் நிர்வாகம் செயற்பட்டுவருகின்றது.

பன்னம்பலான அறிக்கையை மட்டும் வைத்துக்கொண்டு யுத்த காலத்தில் இடம்பெற்ற அறிக்கையை வைத்துக்கொண்டு வாதிட முடியாது. புனான ஈஸ்ட் வந்து 240 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு கோரளைபற்று மத்தியுடன் இணைக்கப்பட வேண்டும் என்று சொல்கின்றார்கள். நான் கேட்கின்றேன் இப்பொழுது புனான ஈஸ்ட் 83.9 சதுர கிலோமீற்றர். புனான ஈஸ்ட்க்குள்ள என்னன்ன வருகின்றது விஜிதர ஜெயந்தியாய, கேணிநகர், ஆலங்குளம், புவனேசன்குளம் போன்ற 8 கிராமங்களையும் எடுத்துப்பார்க்கின்ற பொழுது விஜிதர ஜெயந்தியாய கோரளைப்பற்று வடக்கில் இருந்தாலும் நிர்வாகம் செய்வது கோராளைப்பற்றுமத்தியில்தான். அது முஸ்லிம் மக்கள் பெரும்பாலும் வாழுகின்ற இடம். கோரளைப்பற்று மத்தியுடன் இணைக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படும் ஆலங்குளம் முழுக்க முழுக்க தமிழ் பகுதி. புவனேசன்குளம் முழுக்க முழுக்க தமிழ் பகுதி புனானையில் தமிழ் மக்களும் இருக்கிறார்கள் சிங்கள மக்களும் இருக்கிறார்கள். ஆகவே இந்த தமிழ் பகுதியெல்லாம் இணைத்து கோரளைப்பற்று மத்தியுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்பது எந்த விதத்தில் நியாயம். ஏற்கனவே தியானவட்டுக்குள்ள கிராமசேவைப் பிரிவும் கோரளைப்பற்று மத்திக்குள் இருக்கின்றது. எங்களுக்கு கோரளைப்பற்று மத்தியுடன் நிர்வாக ரீதியாக இருக்க விருப்பமில்லை என்று தற்பொழுது கடிதம் அனுப்பியிருக்கின்றார்கள். ரவூப் ஹக்கீம் அவர்கள் யானையை சோற்றுக்குள் மறைக்கும் செயலை செய்திருந்தார். அவர் என்ன சொல்கின்றார் என்றால் தியாவட்டுவான் வந்து 1 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கின்ற கோறளைப்பற்று மத்தியுடன் மக்களை சேர்ப்பது இலகா அல்லது 30 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கின்ற கோரளைப்பற்று வடக்கு வாகநேரியுடன் அவர்கள் நிர்வாகம் செய்கின்றார்கள் என்கின்றார்கள். இது என்ன பச்சைப் பொய் தியாவட்டுவான் இன்றைக்கும் கோறளைப்பற்று மத்தியுடன் தான் இருக்கின்றது. இது தெரியாத ஒருவராகத்தான் ரவூப் ஹக்கீம் அவர்கள் இருக்கின்றார். ரவூப் ஹக்கீம் அவர்கள் இந்த மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இல்லை. அப்படி இல்லையென சொன்னாலும் ஒரு பொறுப்பு வாய்ந்த கட்சியின் தலைவர் ஒரு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் நீண்ட கால அமைச்சராக இருக்கும் ஒருவர் தியாவட்டுவான் கிராமசேவைப் பிரிவு எங்கே இருக்கின்றது என்று கேட்டிருக்க வேண்டுமா இல்லையா? பொய்யான தகவலை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து தான் அவர் பேசினார். தியாவட்டுவான் முழுக்க முழுக்க கோறளைப்பற்று மத்தியால் தான் நிர்வாகம் செய்யப்படுகின்றது.

தொடரும்...



# பிராந்திய செய்திகள்



## கூரைக்குள் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட கைக்குண்டு

கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வீடொன்றின் கூரை திருத்த வேலையின் போது , கூரைக்குள் இருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.



குறித்த வீட்டின் கூரை திருத்த வேலைகளை, வேலையாட்களை கொண்டு, வீட்டின் உரிமையாளர் மேற்கொண்டு இருந்தார்.

அதன் போது கூரையின் மேற்பகுதியில் கைக்குண்டு ஒன்று மறைத்து வைக்கப்பட்டு இருந்ததனை வேலையாட்கள் கண்ணுற்று உரிமையாளருக்கு தெரிவித்தனர்.

அதனை அடுத்து வீட்டின் உரிமையாளர் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்ததனை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் கைக்குண்டை மீட்டதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## யாழில் விபத்து – ஒருவர் படுகாயம்!

யாழில் மோட்டார் சைக்கிளுடன் பட்டா ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

யாழ்ப்பாணம் - பலாலி வீதியில், இலுப்பையடி சந்தியில் அன்று (06) மதியம் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.




பலாலி வீதியில் பயணித்த பட்டா ரக வாகனத்துடன், நாவலர் வீதியிலிருந்து, பலாலி வீதிக்கு ஏற முற்பட்ட மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் படுகாயமடைந்துள்ள நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### வீடு தீக்கரை – பெண்கள் உட்பட எழுவர் கைது!

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பாலைமீன்மடு 50 வீட்டுத் திட்டத்தில் வீடு ஒன்று தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் பெண்கள் இருவர் உட்பட 7 பேரை அன்று (06) கைது செய்துள்ளதாக கொக்குவில் பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த ஜனவரி முதலாம் திகதி குறித்த பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுவரும் இரு குழுவினர் மதுபானம் அருந்தியுள்ள நிலையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் சண்டையாக மாறியதையடுத்து ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.



இதனையடுத்து, குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட நாகநாதன் நவநீதனின் வீடு இனம் தெரியாதோரால் தீ வைக்கப்பட்டதை அடுத்து வீடு முற்றாக எரிந்து சாம்பலாகியது.

இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிசார் சம்பவம் தொடர்பில் இரு பெண்கள் உட்பட 7 பேரை கைது செய்தனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

### அரிசியின் விலை 300 ரூபாவாக அதிகரிக்கலாம்!

தற்போது நிலவும் உர நெருக்கடி காரணமாக எதிர்காலத்தில் ஒரு கிலோ அரிசியின் விலை 300 ரூபாவாக அதிகரிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.



பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

பொலன்னறுவையில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள், உரப் பிரச்சினை காரணமாக இந்த நிலைமை ஏற்படக்கூடும் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கிடையில், உரிய நேரத்தில் இரசாயன உரங்கள் கிடைக்காததால் பயிர்கள் மஞ்சள் நிறமாக மாறி வருவதாக விவசாயிகள் தொடர்ந்து குற்றம் சுமத்தி வருகின்றனர்.

## 5 நாட்களில் 1,227 டெங்கு நோயாளர்கள்

2022 ஆம் ஆண்டில் முதல் ஐந்து நாட்களுக்குள் 1,227 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும்இ டெங்கு நோயைப் பரப்பும் பிரதான 4 வகையான வைரஸ் வகைகளின், மூன்றாவது வைரஸ் வகையினால் தொற்றுக்குள்ளாகிய டெங்கு நோளாயர்களும் இலங்கையில் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின், சமூக வைத்தியர் அனோஜா தீரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நிலையை கட்டுப்படுத்துவதற்காக நாடளாவரீதியில் டெங்டகு ஒழிப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

இந்த வேலைத் திட்டம் ஜனவரி 04 முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இடம்பெறும். இதற்காக முப்படையினர், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது.

இதற்கமைய, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, குருநாகல், புத்தளம், காலி,யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, இரத்தினபுரி ஆகிய டெங்கு அவதானம் கூடிய மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### *சிகிச்சைக்கு வந்த மூதாட்டியின் நகைகள் திருட்டு!*

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த வயோதிப பெண்மணியின் 3 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளதாக, பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் குறித்த வயோதிப பெண் அன்று (06) சிகிச்சையின் நிமித்தம், எக்ஸ்ரே எடுப்பதற்காக சென்ற போது, தான் அணிந்திருந்த தங்க சங்கிலி மற்றும் காப்பு ஆகியவற்றினை கழட்டி தனது கைப்பையினுள் (ஹாண்ட் பாக்) வைத்து சென்றுள்ளார். திரும்பி வந்து கைப்பையினை பார்த்த போது, அதனுள் இருந்த நகைகள் களவாடப்பட்டு இருந்தமையை கண்ணுற்று, வைத்தியசாலை நிர்வாகத்திடம் முறையிட்டுள்ளார்.

நிர்வாகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய வைத்தியசாலை பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வருவோர் நகைகள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்களை கொண்டு வருவதனை தவிர்த்துக் கொள்ளுமாறு, வைத்தியசாலை நிர்வாகம் பல தடவைகள் எச்சரித்து வந்துள்ளது. தினமும் வைத்திய சாலைக்கு பெருமளவானோர், பல்வேறு பகுதிகளில் இருந்து வருவதனால் சிகிச்சைக்கு வருவோர் தமது உடமைகளை தாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. அதனால் பெறுமதியான உடமைகளுடன் வருவதனை தவிர்த்துக்கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகம் கோரியுள்ளது.

### அபாயம் – இலங்கையில் புதிய வகை நுளம்பு!

யாழ்ப்பாண நகர எல்லைக்குள் "எனோபீலிஸ் டிபென்ஸி" எனப்படுகின்ற புதிய வகை மலேரியா நுளம்பு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இது மிகவும் அனர்த்த நிலை என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் ஏ. கேதீஷ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் (05) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தென்ஆபிரிக்காவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள சிலருக்கு மலேரியா தொற்று ஏற்பட்டுள்ளதாக தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசேட சைவத்திய நிபுணர்கள் ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, யாழ்ப்பாண நகர எல்லையில் அடையாளம் காணப்பட்டுள்ள இந்த நுளம்ப துரிதமாக பரவும் துரிதமாக பரவும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 2022 ஆம் ஆண்டின் முன்பள்ளிப் பாலர் பாடசாலைகள் ஆரம்பிக்கும் நிகழ்வு

2022 ஆம் ஆண்டின் முன்பள்ளிப் பாலர் பாடசாலைகள் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கும் நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன. இத்தொடரில் இறக்காமம் பிரதேசத்தில் காணப்படும் பாலர் பாடசாலைகளின் வித்தியாரம்ப நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தவகையில் இறக்காமம் பிரதேச Global Change Makers - GCM முன்பள்ளிப் பாலர் பாடசாலையின் வித்தியாரம்ப நிகழ்வு புதன் கிழமை பாலர் பாடசாலையின் ஆசிரிகைகளான யூ.எல். சபினாஸ், யூ.எல். பாத்திமா நஸ்பா, எம்.ஜெஸானா பர்வின் ஆகியோரின் ஏற்பாட்டில் பாலர் பாடசாலை நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். றௌஸானின் தலைமையில் இடம்பெற்றது.

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம். இம்டாடின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் அடிப்படையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு இறக்காமம் பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச். றகீப், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.எச். வஹாப், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.எல்.ஸபூறுல் ஹஸீனா மற்றும் பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் எஸ்.எப். றிஸ்மியா ஜஹான் ஆகியோரும் விஷேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.





# மதவாத சக்திகளுக்கு பின்னால் உள்ள அரசியல்



ஹலால் முதல் அழுத்கமை வரையிலான அனைத்து காழ்ப்புணர்வு வன்முறை கட்டவிழ்ப்புகளிற்கும் பின்னால் தேசிய பிராந்திய பூகோள அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் இருப்பதனை அவ்வப்போது சுட்டிக்காட்டினோம். அதே போன்றே இந்தநாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துடன் அத்தகைய நிகழ்ச்சி நிரல்கள் ஒருபொழுதும் காலாவதியாவதில்லை என்பதனையும் நீறுபூத்த நெருப்பாக இருந்து காலத்துக்குக் காலம் சந்தர்பங்கள் சாதகமாக அமைகின்ற பொழுதெலாம் அவை தலை விரித்து தாண்டவமாடும் என்றும் முன்னெச்சரிக்கை விடுத்திருந்தோம்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவ்வப்போது சந்தர்பங்களை சமாளிக்கவும் பின்னர் மறந்துவிடவும் கூடிய உஷார் மடையர்கள் போல் செலாற்றுவதில் அல்லது எதிர்வினையாற்றல்களோடு நின்று கொள்வதில் பிரசித்தமாக இருக்கின்றோம். அண்மைக் காலமாக தலைதூக்கும் இனமத வெறி சக்திகளை அரசு ஏன் கண்டுகொள்வதில்லை, அரச ஊடகங்கள் அவர்களுக்கு ஏன் சந்தர்பங்களை வழங்குகின்றார்கள், தனியார் ஊடகங்கள் விடயத்தில் காழ்ப்புணர்வுப் பரப்புரைகளை தடைசெய்கின்ற சட்டங்கள் ஏன் அமுலாக்கப் படுவதில்லை ? என பலரும் கேள்வி எழுப்புகின்றார்கள்.

முன்னைய தேசிய அரசில் ரணில் மைத்திரி புரிந்துணர்வுடன் செயற்பட்டாலும் அவ்விருவரும் இரு பிரதான தேசிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் ஆவார். பெரும்பான்மை சமூகத்தின் ஆதரவுத்தளம் குறித்த அவர்களது கரிசனை, கட்சி அரசியலில் மக்கள் பிரதிநிதிகளின் அரசியல் காய் நகர்த்தல்கள், அமைச்சரவை மற்றும் பாராளுமன்ற பெரும்பான்மை நெருக்குவாரங்கள், மதகுருமார்களின் அழுத்தங்கள், கடும்போக்கு சக்திகளை கையாள்வதில் உள்ள உள்நாட்டு, வெளிநாட்டு நெருக்குதல்கள் அரசியல் இராஜ தந்திர நகர்வுகள் என பல பரிமாண சவால்கள் அவர்களது நிலைப்பாடுகளிலும் தாக்கம் செலுத்துகின்றன.

**ravya-2**தென்னிலங்கையில் சிங்கள முஸ்லிம் கலவர நிலையினை தோற்றுவித்து நல்லாட்சி அரசிற்கு நெருக்கடிகளை கொண்டுவருகின்ற நோக்கில் சில கடும்போக்கு சக்திகளை கருவிகளாக பயன்படுத்துகின்ற மறைமுகமான நிகழ்ச்சி நிரல் அல்லது சூழ்ச்சி இருப்பதாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இருவரும் ராவய பத்திரிகையின் 30 யஆண்டு நிகழ்வில் தெரிவித்திருந்ததோடு தராதரம் பார்க்காமல் அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்று எச்சரிக்கையும் விடுத்திருந்தனர்.

இவ்வாறான ஒரு பின்புலத்தில் தான் கடந்த கால அரசின் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ அரசின் நிலைப்பாடு குறித்து பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தினார். அவரது உரையில் முஸ்லிம்களையும் இஸ்லாமிய அமைப்புகளையும் பற்றி அவர் குறிப்பிட்ட கருத்துக்கள் மற்றும் **ISIS** தொடர்பான காலம் கடந்த புலனாய்வுத் தகவல்கள் என்பன கடும்போக்கு சக்திகளை ஆற்றுப் படுத்துவதாகவும் முஸ்லிம்களை ஆத்திரமூட்டுவதாகவும் அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### தேசிய அரசியல் களநிலவரங்கள்:

இன்று தேசிய அரசியலில் குறிப்பாக உள்ளூராட்சித் தேர்தல் நடை பெறவுள்ள நிலையில் மூன்றாவது அணியாக முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களும் அவர்களோடுள்ள கடும் போக்கு உதிரிக் கட்சிகளும் களமிரங்குகின்ற சமிக்ஞைகளை வெளியிட்டு வருவது கடந்த அரசிற்கு பன்முக சவால்களை தோற்றுவித்துள்ளது.

மேற்படி தரப்பினர் மீண்டும் தமது பலமான அரசியல் பிரவேசத்திற்கு கடும்போக்குவாத இனமதவெறி பரப்புரைகளில் தங்கியிருப்பதனை குறிப்பாக சிறுபான்மை இனங்களுக்கெதிரான அரசியல் பரப்புரைகளில் ஈடுபாடு காட்டுவதனை நாம் அறிவோம்.

அதேவேளை சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் மஹிந்த அணி பிளவு படுவதை ஏதேனும் வகையில் கையாள்வதன் மூலம் மாத்திரமே உள்ளூராட்சி தேர்தல்களில் மாத்திரமன்றி எதிர்கால பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முகம்கொடுக்கும்வகையில் சுதந்திரக் பலப் படுத்திக் கொள்ளும் கடப்பாடு ஜனாதிபதி மைதிரிக்கு இருந்தது எனலாம்.

அதேபோன்றே ஏதோ ஒரு வகையில் சுதந்திரக் கட்சியை பலவீனப் படுத்தவேண்டிய தேவை ஐக்கிய தேசியக் கட்சியிற்கு இருப்பதனை அண்மைக்கால நகர்வுகள் உணர்த்துகின்றன. குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ அணியினரை பிரித்தெடுப்பதில் அவர்களுக்கு சாதகமான அரசியல் சூழ்நிலைகள் இருக்கின்றன.

இந்த நிலையில் தான் பல்வேறு பாரிய ஊழல் மோசடி குற்றங்களுக்காக பிடிக்கப்பட்டவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னரும் பல்வேறு அரசியல் நகர்வுகளில் புரிந்துணர்வுகளில் பெரும்நம்பிக்கைகளுடன் ஈடுபாடுகாட்டி வந்தனர்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் அரசியலுக்கு வருவாரா ? அதிபர் மஹிந்த பிரதமர் வேட்பாளராக வருவாரா..? அவர்கள் அரசியலுக்குள் கொண்டு வரப்பட்டால் சந்திரிக்கா அம்மையார் தேசிய அரசிற்கான ஆதரவை விலக்கிக் கொள்வாரா ? என்றெல்லாம் செய்திகள் அடிபட்டன. இவ்வாறான அரசியல்கள நிலவரங்களில் மூன்றாம் அணியினருக்கும் கடும்போக்கு உதிரிக் கட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ள சாதகமான சந்தை வாய்ப்புக்கள் அவர்களுக்கு துணை போகும் இன மத வெறிக் கும்பல்களிற்கு மிகச் சாதகமான களநிலவரங்களை தோற்றுவித்துள்ளன.

எனவே, இவ்வாறான தேசிய அரசியல் கள நிலவரங்களை, தேசிய அரசியல் தலைமைகளின் திரிசங்கு நிலைமைகளை கவனத்தில் கொண்டு சிறுபான்மை சமூகங்கள் குறிப்பாக முஸ்லிம் அரசியல் சிவில் சன்மார்கத் தலைமைகள் கூட்டுப் பொறுப்புணர்வுடன், சாணக்கியமாகவும், சாதுரியமாகவும் சமூகத்தின் தேசிய நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்க வேண்டும்!

### சர்வதேச பிராந்திய அரசியல் இராஜதந்திர நகர்வுகள்:

அதிபர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்டப் போரை தீவிரப் படுத்தியிருந்த நிலையில் மேலைத்தேய நாடுகளுடன் இராஜதந்திர முறுகல் நிலையை தோற்றுவித்திருந்தார். நோர்வே மத்தியஸ்தம் முற்றாக நிராகரிக்கப்பட்டது. மனித உரிமை மீறல்கள் குற்றச் சாட்டுகளுடன் இலங்கை மீது மேலைத்தேயம் எகிறிக் குதித்தது.

unhrc-in-sessionபோருக்குப் பின்னரான இலங்கையில், பிராந்தியத்தில் மேலாதிக்க சக்திகளின் முஸ்தீபுகள் அதிகரித்தன சீனாவுடனான நெருக்கமான உறவு சர்வதேச சமூகம் என்ற மேலைத்தேய சக்திகளிற்கும் இந்தியாவிற்கும் பெரும் சவாலாக இருந்தது. ஐ.நா மனித உரிமை ஆணையகத்தில் அமெரிக்க நோர்வே இஸ்ரவேல் மற்றும் ஐரோப்பிய நாடுகள் இலங்கைக் கெதிராக தீர்மானங்களை கொண்டுவந்த பொழுது இந்தியாவும் ஆதரவை அளித்தது.

ஈரான் லிபியா பாகிஸ்தான் போன்ற முஸ்லிம் நாடுகள் யுத்த காலத்திலும் போருக்குப் பின்னர் வளைகுடா முஸ்லிம் நாடுகளும் இலங்கைக்கு ஆதரவை அளித்தன. இலங்கை முஸ்லிம்களும் அமெரிக்க தலைமையிலான மேலைத்தேய நெருக்கடிகளின் பொழுது இலங்கை அரசிற்கு ஆதரவளித்தனர், வீதிகளில் இறங்கி ஆர்பாட்டம் செய்தனர்.

இவ்வாறான நிலையில் தேசிய அரங்கிலும் சர்வதேச அரங்கிலும் இலங்கை அரசிற்கான முஸ்லிம்களது ஆதரவுத் தளத்தை இலக்கு வைத்து பல்வேறு நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன, முஸ்லிம் விரோத சக்திகள் ஊக்குவிக்கப்பட்டன.

ஏற்ற காலத்தில் மஹிந்த அரசை அடிபணியச் செய்வது அல்லது இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது மேலைத்தேய மேலாதிக்க சக்திகளின் நிகழ்ச்சி நிரலில் இருந்தது. மனித உரிமை மீறல்கள் அழுத்தத்திலிருந்து விடுபடவும், போர்க்குற்ற விசாரணைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் அப்போதைய இலங்கை அரசு பயங்கரவாதத்திற்கெதிரான சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முனைப்புக் காட்டியது.

SL MUSLIMS இல்லாத பயங்கரவாதம், அடிப்படை வாதம் , தீவிரவாதங்களை இலங்கையில் அரங்கேற்ற பல்வேறு உள்நாட்டு பிறநாட்டு சக்திகளும் கூலிப் படைகளும் களத்தில் இறங்கின, இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களிற்கும் எதிராக சர்வதேச அரங்கில் சந்தைப் படுத்தப்படும் "இஸ்லாமோபோபியா" இலங்கையில் சந்தைப் படுத்தப்பட்டது.

நாட்டில் இராணுவத்தின் பிடியை ஸ்திரப்படுத்த வேண்டிய தேவைப்பாடு அன்றைய அரசிற்கு இருந்தது. அதற்கான நியாயங்கள் தேவைப்பட்டன.

ஹலால் முதல் அளுத்கமை வரை முஸ்லிம்கள் மீது காட்டுமிராண்டித் தனங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன, முஸ்லிம் அரசியல் தலைமைகள் எவ்வாறு போனாலும் சிவில் சன்மார்கத் தலைமைகள் முஸ்லிம்களை சரியாக வழிநடத்தியமை முஸ்லிம்கள் சகிப்புத் தன்மையுடன் நடந்து கொண்டமை , சமாதான சகவாழ்வு நிகழ்ச்சி நிரலை தீவிரப் படுத்தியமை நாடு தழுவிய அமைதியின்மை ஏற்படுவதனை தவிர்த்தது. இது குறித்து பல தேசிய மற்றும் சர்வதேச சக்திகள் திருப்தியை வெளியிட்டிருந்தன.

இவ்வாறான ஒரு அரசியல், இராஜ தந்திர களநிலவரங்களின் பின்புலத்தில் நாடு எதிர் கொண்டிருந்த பொரளாதார நெருக்கடியையும் கவனத்தில் கொண்டு தான் ஜனாதிபதித் தேர்தலை அதிபர் மகிந்த ராஜபக்ஷ இரண்டு வருடங்களிற்கு முன்னரே நடாத்தி தனது நிலையை மேலும் ஸ்திரப்படுத்திக் கொள்ள முன்வந்தார்.

### ஆட்சி மாற்றமும் இனவாத சக்திகளும்:

இலங்கையில் நல்லாட்சி மாற்றம் நிகழ்ந்தமை உண்மைதான், அதற்கு முஸ்லிம்களும் பிரதான பங்களிப்பினைச் செய்தார்கள், தமிழர்களும் செய்தார்கள், தேசிய அரசியல் சக்திகளும் செய்தன, பின்னால் சர்வதேச பிராந்திய சக்திகளும் செய்தன.

ஆனால், இனவாத சக்திகள் அழிந்துவிடவில்லை, அவர்களை பின்னாலிருந்து கருவிகளாக இயக்குகின்ற பிராந்திய மற்றும் சர்வதேச மேலாதிக்க சக்திகள் அழிந்துவிடவில்லை, மீண்டுமொரு ஆட்சிமாற்றத்தை விரும்புகின்ற புதிய சக்திகள் தோன்றுவதற்கான அதே வழிமுறைகளை புதுப் புது வடிவங்களில் களநிலவரங்களில் கையாள்வதற்கான சாத்தியப்பாடுகளும் இல்லாமல் இல்லை.

கடந்த காலங்களில் இனமத வெறி கடும்போக்கு நிகழ்ச்சி நிரல்களை தீவிரமாக முன்னேடுத்த சக்திகள் நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதான பதவிகளை வகிப்பதாக முன்னால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரும் தெரிவித்துள்ளனர். நாம் நிகழ்வுகளால் உந்தப் படுகின்றோம் நிகழ்ச்சி நிரல்களை மறந்து விடுகின்றோம்

முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான சவால்களை இன ரீதியாகவோ, மத ரீதியாகவோ, பிரதேச ரீதியாகவோ , மொழி ரீதியாகவோ நாம் அணுகாது, தேசத்தில் உள்ள சகல முற்போக்கு தேசிய சக்திகளுடனும் இணைந்து அவற்றை தேசிய பாதுகாப்பிற்கும், சமாதான சகவாழ்விற்கும், இனங்களுக்கிடையிலான, நல்லிணக்கத்திற்கும், தேசத்தின் ஸ்திரத் தன்மைக்கும், அபிவிருத்தியிற்கும் விடுக்கப்படும் சவால்களாக நாம் எதிர்கொள்ளல் வேண்டும்.

இனவாத மதவாத சக்திகள் எந்த தரப்பில் இருக்கின்றார்கள் என்பதனை விட குறிப்பிட்ட தரப்புக்கள் அத்தகைய சக்திகளை எவ்வாறு கடந்த காலங்களில் கையாண்டார்கள், எதிர்காலத்தில் கையாள்வார்கள் என்பதிலேயே நாம் அவதானமாக இருக்க வேண்டும். அம்பையும் ஈட்டியையும் யார் யார் எவ்வாறெல்லாம் பயன்படுத்துகின்றார்கள் என்பதே எம்முன்னுள்ள பிரதான கேள்வியாகும்.

தெளிவான தேசிய சமூக பார்வையும்.கூட்டுப் பொறுப்பும், மூலோபாய திட்டமிடல்களும் இல்லாமல் பயணிக்கும் ஒரு சமூகம் அடுத்தடுத்த சமூகங்களை நொந்து கொள்வதில் அர்த்தமில்லை.அரசியலும் இராஜ தந்திரமும் முஸ்லிம் சமூகம் பறிகொடுத்து பரிதவிக்கும் ஆயுதங்களாகும்!"

சுழியோடி

# முதல் காதல்



-ஆர்ஜே-

ஒவ்வொருவரின் வாழ்க்கை பக்கங்களை புரட்டிபார்த்தால் அதில் யாராவது ஒரு சிலர் அழியா சுவடுகளை விட்டு சென்று இருப்பார்கள். அன்பை மட்டுமே காட்டதெரிந்த அம்மா, வாழ்க்கையின் நிதர்சனத்தை உணரவைத்த அப்பா, வீட்டிற்குள் எவ்வளவு சண்டையிட்டாலும் வெளியே யாரிடமும் விட்டு கொடுக்காத தங்கைகள், இன்பத்தில் மட்டுமே ஒன்று சேர்ந்த உறவுகள், துன்பத்தில் உடனிருந்த நட்புகள் என ஒவ்வொருவரின் வாழ்க்கை பக்கங்களை இப்படி யாராவது ஆக்கிரமித்து இருப்பார்கள். இதில் சிலரை நினைத்தால் கோபம், வருத்தம், வெறுப்பு, வேதனை, பாசம், காதல் என்று பலவும் நினைவில் தோன்றி கடந்த காலங்களை நினைவுபடுத்த தவறுவதில்லை.

அப்படி என் வாழ்க்கை புத்தகத்தில் காதலெனும் பக்கத்தில் தனது முதல் பெயரை எழுதியவள் தான் அவள். முதல் காதல். இப்பொழுது அவளை நினைக்கும் பொழுதுகூட மனதில் ஒருவித மகிழ்ச்சி, சொல்ல தெரியாத உணர்வுகள் உடலின் ஒவ்வொரு செல்லிலும் தோன்றி இதழோரம் புன்னகை புரிய செய்வது எனக்கு மட்டுமே தெரியும். ஆறாம் வகுப்பில் தோன்றிய காதல். அது காதலா? ஈர்ப்பா? இல்லை அதை தவிர வேறு எதுவுமா? என்பதை சொல்ல தெரியவில்லை. நூற்றுக்கணக்கான பெண்கள் படிக்கும் பள்ளியில் அவளை மட்டுமே கண்கள் தேடிய நாட்கள் அது.

அவளுடன் சேர்ந்து ஒன்றாக பள்ளி செல்லவே அருகில் இருந்த பாதையை விட்டு தொலைவில் அவள் செல்லும் பாதையில் பயணித்த நாட்கள். அவள் என்னை கடந்து செல்லும் போது நண்பர்களிடம் என் பெயரை சத்தமிட்டு கூற சொன்ன நாட்கள். அவள் முன் நான் தான் ஏதோ பெரிய ஹீரோ போல நடந்து கொண்ட நாட்கள். அவளிடம் வேண்டுமென்றே வம்பு வளர்த்து அவளை அழவைத்த நாட்கள். அவளுக்கு உடல் நிலை சரியில்லா நேரங்களில் அவள் வீட்டிற்கு சென்று அவளை சந்தித்து அவள் தாத்தாவிடம் "டீச்சர் ஏன் இன்னைக்கு அவ லீவ்னு கேட்டுவர சொன்னாங்க" என்று பொய் கூறிய நாட்கள் என ஒவ்வொன்றையும் நினைக்கும் பொழுது மனம் சிறுபிள்ளையென மாறி தவிப்பதை என்னால் தடுக்க முடிவதில்லை. அதன்பின் வெவ்வேறு பள்ளிகளில் சேர்ந்த பின்னும் அவளை காலையும், மாலையும் சைக்கிளில் பின் தொடர்ந்து அவள் என்னை பார்த்த பின் சிதறவிடும் முத்துச் சிரிப்பினை அள்ளி சேமித்து இ.ன்றுவரை மனப்பெட்டகத்தில் பொக்கிசமாய் பத்திரப்படுத்தி வைத்துள்ளேன்.

அவள் என்ன நினைத்து எனைப்பார்த்து சிரிப்பாளோ அது எனக்கு தெரியாது. ஒரு வேலை ஒன்றாய் படித்த மாணவன் நான் என்ற காரணத்தினால் அவள் அதை செய்து இருக்கலாம். ஆனால் அந்த சிரிப்பினில் நான் இன்பமாய் தொலைந்துபோனது என்னவோ உண்மை தான். அந்த சிரிப்பினை மட்டுமே காரணமாய் வைத்துக்கொண்டு நான் செய்த சிறுபிள்ளைதனமான காரியங்கள் எத்தனை எத்தனை. அவளை எனக்கு பிடிக்கும் என்று மட்டுமே சொன்ன என்னிடம் இது தான்டா காதல் என திசைதிருப்பியது என் நண்பர்களே. "இது அவனுடைய ஆளுடா", "இன்னைக்கு உன் ஆளை கடையில பார்த்தேன்டா", "அவளும் உன்னை தான்டா பார்க்குறா" என உருவேற்றி என் மனதில் "பிடிக்கும்" என்ற வார்த்தையை "காதல்" என மாற்றிய பெருமைகள் அனைத்தும் அவர்களையே சேரும். அதுவும் எனக்கு பிடித்து தான் இருந்தது. ஏன் ஏதோ மிகப்பெரிய சாதனையை செய்தது போல கர்வம் கொண்டதும் உண்டு.

"காதலை சொல்ல தைரியமில்லாதவன், காதல் செய்ய தகுதியில்லாதவன்" ஆம் என் காதலை அவளிடம் வெளிப்படுத்தினேன். பத்தாம் வகுப்பு படித்து கொண்டிருந்த நாட்கள் அது. ஏதோ தேர்வு எழுதுவது போல ஒரு வெள்ளைத்தாளில் நான்கு பக்கங்களுக்கும் மேல் அவள் மேல் கொண்ட காதலை முத்து முத்தாய் எழுதி பின் காதலை குறிக்கும் ஸ்டிக்கர் படங்களை ஒட்டி ஆங்காங்கே காதல் அம்பினை விட்டு கொடுத்தேன். அந்த தருணத்தில் உடலின் ஒவ்வொரு பாகமும் நடுங்க, காக்கி பேண்ட்டும் வெள்ளை சட்டையும் வியர்வையில் மூழ்கிப்போனது நிஜம். கத்தியை எடுத்துகூட ஒருவனை குத்திவிடலாம் ஆனால் ஒரு காதல் கடிதத்தினை ஒரு பெண்ணிடம் கொடுப்பது என்பது எவ்வளவு சவாலான ஒன்று என்பதை அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும்.

மனப்பக்குவம் அற்ற அந்த சிறுவயதினில் நான் செய்த செயலும் அதனால் நடந்த விளைவுகளும் அந்த நேரத்தில் பல வலிகளை கொடுத்தாலும் இப்பொழுது நினைக்கும் பொழுது சிரிப்பைத்தான் கொடுக்கிறது.

அதன் பின் கல்லூரி நாட்கள், வேலை என என் வாழ்க்கை காலச்சக்கரத்தில் மாட்டி சுழல ஆரம்பிக்க அவளை சந்திக்கும் வாய்ப்பு இல்லாமலே போனது. அவள் பெயரை யாரும் உச்சரிக்க கேட்கும் பொழுது ஒரு நிமிடம் ஸ்தம்பித்து தான் போகிறேன். நீண்ட கூந்தலை கொண்ட பெண்களை காணும் நேரம் அவள் முகம் ஒருநொடி தோன்றிமறைவதை என்னால் தடுக்கமுடிவதில்லை. சிலநேரம் அவளை பற்றி அறிய முற்பட்டு அவளின் பெயரை கொண்டு முகநூலில் தேடி பல இரவுகளை தூங்கா இரவாக கழித்து இருக்கிறேன். நான் கல்லூரி படிப்பை தொடங்கிய நாட்களுக்கு ஓரிரு தினத்திற்கு முன் அவளை கடைசியாய் பார்த்தது. அதன்பின் இந்த ஏழு வருடங்களாக அவள் ஞாபகங்கள் அலையென மனதில் மோதி செல்வதுண்டு.

இன்று எதிர்பாராவிதமாக அவளை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவளுக்கு திருமணமாகிவிட்டது என நண்பர்கள் கூறும் பொழுது கூட விளையாட்டிற்கு கேலி செய்கிறார்கள் எனநினைத்தேன். ஆனால் அவள் அவளுடைய கணவன், குழந்தையுடன் நடந்து செல்வதை பார்த்தேன். ஒரு நிமிடம் சுற்றும் பூமி நின்று காலில் இருந்து நழுவியது போல் இருந்தது. ஆனாலும் ஒருவித புன்னகை இதழோரம் அரும்பியது தான் உண்மை. குழந்தையை கைகளில் ஏந்தி கொஞ்சிக்கொண்டே கணவனுடன் அவள் சென்ற அழகு என் மனதில் அழியா நினைவாக மாறிப்போனது.

ஏழு ஆண்டுகளுக்கு முன் நான் கண்ட என்னவளுக்கும் மன்னித்துகொள்ளுங்கள் இனி அவள் என்னவள் இல்லை. அவளுக்கும் இப்போது இருப்பவளுக்கும் நிறையவே வித்தியாசங்கள். ஆனால் அவளுடைய நீண்ட கூந்தலும், சிரிக்கும் பொழுது தோன்றும் கண்ணக்குழியும் இன்றும் மாறவில்லை. என்னுடைய காதல் காவிய காதலோ, கண்டதும் காதலோ, இனக்கவர்ச்சியோ இல்லை. இப்பொழுதும் அவளின் மீது கொண்டது காதலா? ஈர்ப்பா? என்பதை என்னால் வரையறுக்க முடியவில்லை. அது ஈர்ப்பு என்றால் நான் இத்தனை நாட்களாய் அவளை மட்டுமே நினைத்து இருந்ததிற்கு பெயர் என்ன? காதல் என்றால் அவளுடைய திருமணம் எனக்கு வலி ஏற்படுத்தாதது ஏனோ?

எது எப்படியோ ஆனால் ஒன்று மட்டும் உண்மை. நான் முதலில் கூறியது போல் அவளை நினைக்கும் பொழுது மனதில் ஒருவித மகிழ்ச்சி, சொல்ல தெரியாத உணர்வுகள் உடலின் ஒவ்வொரு செல்லிலும் தோன்றி இதழோரம் புன்னகை புரிய செய்வது எனக்கு மட்டுமே தெரியும்.

## வாழ்க்கை தத்துவங்கள்

இன்பமே கடைசி வரைக்கும் நிலைக்க வேண்டுமென்று எண்ணாதே அனைத்தும் மாறும் நீ கண்ணிமைக்கும் நேரத்தில். இன்பம் என்றுமே என்னை விட்டு நீங்க கூடாதென எண்ணி வாழ்வது கூட மனதில் இன்பம் நம்மை விட்டு நீங்கி விடுமோ என்று நீ நினைக்கும் ஒரு துன்பம் தான்.

நேர்மையான குணம் கொண்டவர்களுக்கு என்றுமே இந்த உலகில் மதிப்பு இல்லை தான் ஆனால் நிச்சயமாக உன் நல்ல மனதுக்காக அந்த இறைவனின் பரிசு கட்டாயம் கிடைக்கும்.

பகையை வளர்க்காமல் எல்லோரிடமும் பொறுத்து போகிறவர்களுக்கே இங்கு கோமாளி, முட்டாள், பிழைக்க தெரியாதவன் என்ற பெயர் கிடைக்கிறது.

வாழ்க்கையில் ஜெயிக்க வேண்டும் என்ற சிந்தனை உனக்குள் வந்து விட்டாலே பொறுப்பு என்பது தன்னாலே அமைந்து விடுகிறது.



அடுத்தவர் ஆயிரம் வழிகளில் வாழலாம் ஆனால் உனக்கென சிறந்த வழியை நீ தேர்ந்தெடுக்கும் வரையிலும் வெற்றி என்பது உனக்கு ஒரு கிடைக்காத பொக்கிஷமே.

லட்சியம் என்ற ஒன்று எதுவும் இல்லாதவன். இந்த உலகை ஜெயிக்க தகுதி இல்லாதவன்.

பட்டை தீட்ட தீட்ட தானே தங்கம் உருவாகும் அதுபோலவே வாழ்க்கையின் இன்னல்களை கடந்து வந்தால் மட்டுமே உன் சாதனை இந்த உலகில் நிஜமாகும்.

## வீட்டில் செய்யக்கூடிய எளிய மருத்துவ குறிப்புகள்

இரவில் மூக்கடைப்புக்கு மின் விசிறியின் நேர் கீழே படுக்க வேண்டாம். சற்று உயரமான தலையணை பயன்படுத்தவும். மல்லாந்து படுக்கும்போது மூக்கடைப்பு அதிகமாகும். பக்கவாட்டில் படுக்கவும். காலையில் பல் தேய்க்கும்போது நாக்கு வழித்து விட்டு மூன்று முறை மூக்கைச் சிந்தவும். சுவாசப் பாதையைச் சுத்தப்படுத்த நமது முன்னோர் காட்டிய வழி இது.

வெண்டைக்காயை உணவில் அடிக்கடி சேர்த்து வந்தால் நரம்புகள் வலிமை பெறும். மூளையின் இயக்கத்தைச் செம்மைப்படுத்துவதுடன் நல்ல ஞாபக சக்தியையும் உண்டாகும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, தாமரை இதழ், வெல்லம் சேர்த்து தண்ணீரில் விட்டுக் கொதிக்க வைத்து வடிகட்டி இரவில் ஒரு டம்ளர் சாப்பிடுவதால் மாரடைப்பைத் தடுக்கலாம். வெள்ளைப் பூசனிக்காயை பூந்துருவலாக துருவி, உப்பு சேர்த்து இஞ்சி, பச்சை மிளகாய், கொத்துமல்லி, கருவேப்பிலை, கடுகு, தாளித்து தயிரில் கலந்து தயிர்ப் பச்சடியாக சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருக்கும். பூசணிக்காய் ரத்தக்கொதிப்பு, கொலஸ்ட்ரால் தலைசுற்றல் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும்.

கை சுளுக்கு உள்ளவர்கள் நீரில் மிளகுத் தூளும், கற்பூரத்தையும் போட்டுக் கொதிக்க வைத்து அந்தத் தண்ணீரைத் துணியில் நனைத்துச் சுளுக்கு உள்ள இடத்தின் மீது போடுங்கள். அல்லது டர்ப்பன்டைன் எண்ணெயைத் தடவினாலும் சுளுக்கு விட்டு விடும். அருகம்புல் சாறை மோருடன் குடித்தால் நீரிழிவு குறையும். உலர் திராட்சைப் பழத்தை வெது வெதுப்பான தண்ணீரில் அரை மணி நேரம் ஊறவைத்து காலையில் அருந்தினால் மாதவிடாய்க் கோளாறுகள், இதய நோய் தீரும்.

புடலங்காயின் இலைச்சாறு, காலையில் குழந்தைகளுக்குத் தருவதால் கக்குவான், இருமல் குணமாகும். மலச்சிக்கல் நீங்கும். புடலங்காய் சமைத்து உண்பதால் தேவையில்லாத உடல் பருமன் குறையலாம்

கரட் சாறும் சிறிது தேனும் பருகி வந்தால் கர்ப்பிணிப் பெண்களுக்கு வாந்தி மட்டுப்படும். எலுமிச்சை பழச் சாற்றில் ரசம் செய்து சாப்பிட்டால் உஷ்ணம் குறையும். கடுகை அரைத்து வலியுள்ள பகுதியில் போட்டால் வலி குறைந்து விடும்.

நுரையீரல் சம்பந்தமான நோய்கள் குணமாக வெற்றிலைச் சாற்றில் இஞ்சி சாற்றை சேர்த்து குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். எள், எள்ளில் இருந்து வரும் நல்லெண்ணெய்யைக் கொடுக்க உடல் இளைந்துக் காணப்படுபவர்கள் தேறி, உடல் எடை அதிகரிக்கும்.

# வடகிழக்கு பிரிவினைவாதத்திற்கு வித்திட்டவர் கருணா அம்மான் நான் இல்லை – சி.சந்திரகாந்தன்(பிள்ளையான்)

**முன்னாள் முதலமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர், அபிவிருத்திக்குழு தலைவர், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் கட்சியின் தலைவருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) அவர்களுடனான சிறப்பு நேர்காணல்**

கடந்தவார தொடர்ச்சி..

**கேள்வி : இலங்கையில் 30 ஆண்டு காலமாக இடம்பெற்றது யுத்தம் । இலட்சத்து 40 ஆயிரம் பேருக்கு மேல் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட ஒரு சம்பவம் இடம்பெற்றது. அதில் பல ஆயுத கட்சிகள் இலங்கையிலே ஒரு இனப்படுகொலை இடம்பெற்றதா இல்லையா?**

பதில் : உண்மையில் அதுவொரு யுத்த காலத்தில் இடம்பெற்ற நிகழ்வு இனப்படுகொலை இடம்பெற்றது என்பது தமிழ் தேசியவாதிகளினுடைய கருத்தாக இருந்தாலும் மக்கள் மரணித்திருக்கின்றார்கள். அந்த போராட்டத்திலே மக்கள் மரணிப்பதை நிச்சயமாக யாராலும் தடுக்க முடியாது. இந்த கேள்விக்கு நீண்ட பதில் சொல்ல வேண்டும். உண்மையில் மன்னாரிலே ஒரு புதைகுழி கிளம்பியது ஒரு கட்டடம் அமைக்கின்றபொழுது சில எலும்புகளை கண்டெடுத்தார்கள்.

அதை அமெரிக்கா வரைக்கும் காவல் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. அது கிட்டத்தட்ட 400 வருடங்களுக்கு முந்திய எலும்புக்கூடுகள் என்று சொல்லப்பட்டது. அந்த இனப்படுகொலையை யார் செய்தது ஏன் செய்தார்கள் என்று தூக்கிபிடித்து கூத்தாடியவர்கள் சத்தமில்லாமல் இருந்தார்கள் அதற்கு என்ன காரணம். அது உண்மையிலே சங்கிலியன் அவர்களால் அந்த காலப்பகுதியிலே போர்த்துக்கேயரின் காலப்பகுதியிலே கிறிஸ்தவ மக்களை கொன்று புதைத்த புதைகுழிகள். அப்படியென்றால் புதைகுழிகளின் ஆரம்பமே யாழ்ப்பாணத்திலிருந்த மன்னர் என்று சொல்லப்படுகின்ற சங்கிலியன் அவர்களால் புதைகுழிகள் உருவாக்கப்பட்டன என்ற காரணத்தினால் அவர்கள் அதை மறைத்துவிட்டார்கள். இன்று யுத்தம் முடிகின்ற பொழுது பல தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். அதை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றோம். நானும் ஏற்றுக்கொள்கின்றேன் அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்றது எத்தனையோ ஆணைக்குழுக்கள் ஏற்றுக்கொள்கின்றது. இன்று ஐக்கிய நாடுகள் சபையிலே மரணித்தவர்கள் பற்றி பேசப்படுகின்றது. ஆனாலும் உள்நாட்டுப் போரினை மக்கள் மறைத்தார்கள் என்பதனை நானும் ஏற்றுக்கொள்கின்றேன்.

**கேள்வி : வெள்ளைக்கொடியுடன் சரணடைந்தவர்களை சுட்டது பிழைதானே?**

பதில் : போராட்ட தர்மம் என்ற அடிப்படையிலே நாங்கள் காணவில்லை. விடுதலைப்புலிகளும் பொதுமக்களுமாக சொல்கின்றார்கள் விடுதலைப்புலிகள் பலர் சரணடைந்தார்கள் அவர்கள் சுடப்பட்டார்கள் என்று சொல்லப்படுகின்றது. உண்மையில் போர் தர்மத்தின் படி எந்த எதிரியாவது சரணடைகின்ற பொழுது அவர்களை சுடக்கூடாது என்று சட்டம் இருக்கின்றது. அப்படி நடந்திருந்தால் அது விசாரிக்கப்பட்டு முடிவு வரும் என்று நாங்கள் நம்புவோம்.

**கேள்வி : தற்பொழுது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் பல வருடங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது இவர்களுக்கு ஒரு மரண சான்றிதழ்களை வழங்குவதன் ஊடாக இவர்களின் பிரச்சனைகளை தீர்த்துவிட முடியும் என்று நினைக்கின்றீர்களா?**

பதில் : இந்த நாட்டிலே தற்பொழுது விடுதலைப்புலிகள் முற்றுமுழுதாக இல்லாமல் போய்விட்டார்கள் என்னும்பொழுது அவர்கள் ஒரு பக்கத்திலே பிரச்சனையில்லை அடுத்த பக்கத்தை விசாரிக்க வேண்டும் என்ற ஒரு அழுத்தத்தை ஒருசாரார் நிற்கின்றார்கள். ஆனாலும் விடுதலைப்புலிகளிடம் இருந்து சரணடைந்து பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு பலர் இருக்கின்றார்கள் என்பது சற்று சிந்தித்து பார்க்க வேண்டிய விடயம். தங்களுடைய அரசியல் அல்லது நீண்ட கால போராட்டம் தோற்றுவிட்டது என்ற கவலையும் அதைப்போன்று இந்த போராட்டத்தின் பால் ஏதோவொரு வழியிலே சில அப்பாவிகளும் அல்லது போராட்டத்திலே ஈடுபட்டவர்களும் அல்லது மறைமுகமாக உதவி செய்தவர்களும் மரணித்திருக்கின்றார்கள்.

அதேபோன்று எங்களோடு இருந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் எங்களுடைய நியாயமான கோரிக்கை எங்கே என்று கேட்ட பொழுது எங்களைக்கூட விடுதலைப்புலிகள் கூட்டித் தள்ளியிருக்கின்றார்கள்.எம் மவர்களை அல்லது விடுதலைப்புலிகள் அமைப்பிலே மாவீரர்களாக இருந்த போராளிகள் குடும்பத்தையே விடுதலைப்புலிகள் கூட்டித்தள்ளியிருக்கின்றார்கள். கடத்தி கொலை செய்திருக்கின்றார்கள். இப்படி பல விடயங்கள் இருக்கின்றன. சகோதர படுகொலைகள் இடம்பெற்றிருக்கின்றது. கொலை என்றால் கொலை தான் சகோதரனை கொன்றாலும் கொலை தான் சிங்களவன் தமிழனை கொன்றாலும் கொலை தான் இவற்றையெல்லாம் வைத்து இன்னமும் சொல்லிக்கொண்டு அரசியல் செய்ய முடியாது என்பது என்னுடைய நிலைப்பாடு. நடந்தவற்றிற்கு பொதுவான தீர்மானத்தை எடுத்து முன்னேறி செல்ல வேண்டுமேதவிர இன்னும் அதை பேசிக்கொண்டிருப்பதால் இங்கு உள்ளத்திலே வாழுகின்ற மக்களை இன்னும் பலவீனப்படுத்துமே தவிர இன்னுமொரு கட்டத்திற்கு நாங்கள் உறுதியாக நின்று உழைப்பதற்கு அவர்களுக்கு உந்து சக்தியை கொடுக்க முடியாது என்பது என்னுடைய அரசியல் நிலைப்பாடு.

**கேள்வி : அப்படியென்றால் இந்த மாகாண சபையினூடாகவாவது தமிழ் மக்களுக்கான பிரச்சனைக்கான தீர்வை நீங்கள் ஒரு முன்னாள் முதலமைச்சர் என்ற வகையிலே கண்டுகொள்ள முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கின்றதா?**

பதில் : வேறு வழியில்லை. தமிழர்களை பொறுத்தவரையில் வடக்கு மாகாணத்தின் நிலைமை வேறு கிழக்கு மாகாணத்தின் நிலைமை வேறு. இன்று இன்னும் இங்கிருக்கின்ற இளைஞர் யுவதிகள் விசேடமாக தமிழ் இளைஞர் யுவதிகளின் நம்பிக்கை என்பது வெளிநாடுகளுக்கு தப்பிச்செல்ல வேண்டும் என்ற நிலை இருக்கின்ற பொழுது இன்னும் நாங்கள் கடைசி நிலைக்கு மக்களை இட்டுச்செல்ல முடியாமல் இருக்கின்றது மக்களை பாதுகாத்து நம்பிக்கை கொடுத்து இருக்கின்ற அதிகாரத்திலே ஒரு முதலமைச்சர் எங்களுடைய பிரதேசத்தை எங்களால் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை கொடுத்து மக்களை நம்பிக்கை ஊட்டி வாழ வைக்க வேண்டும். அதற்கான ஆரம்ப படியாகத்தான் அதனை பார்க்க முடியுமே தவிர என்னைப் பொறுத்தவரையில் சிங்கள மக்கள் மத்தியிலே இதை சரியாக நடத்தி ஒட்டுமொத்தமான 9 மாகாணத்திற்கும் சரியான அதிகாரப்பகிர்வைக் கொடுத்து மாகாணசபை ஊடாக பல அபிவிருத்திப் பணிகளையும் அதிகாரங்களையும் பிரித்து வழங்கி மத்திய அரசாங்கத்திலே குறைந்த அமைச்சர்களைக் கொண்ட ஒரு நிலைமையை உருவாக்கினால் மாகாணசபை நிச்சயமாக வெற்றிபெறும். தமிழ் மக்களும் நம்பிக்கையோடு இதை ஏற்றுக்கொள்வார்கள்.

**கேள்வி : நீங்கள் பாராளுமன்றத்தில் இருக்கின்றீர்கள் முதலமைச்சராக போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் உங்களுக்கு கிடைத்தால் போட்டியிடுவீர்களா?**

பதில் : இது பொதுவாக எல்லா ஊடகங்களும் கேட்கின்ற கேள்வி தான். நானும் பல ஊடகங்களுக்கு பதில் கூறியிருக்கின்றேன். கிழக்கு மாகாணத்திலே தனித்துவம் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் நியாயமாக நடத்தப்பட வேண்டும் என்று நீண்ட காலமாக குரல் கொடுத்து வந்திருக்கின்றோம். அதைப்போன்று பொறுப்பேற்று கிழக்கு மாகாணத்தை நிச்சயமாக கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பும் தமிழ் மக்கள் கட்சிக்கு இருக்கின்றது. அதே போன்று முதலமைச்சராக முதலில் தெரிவு செய்யப்பட்டு போலித் தேசியவாதத்திற்கு திட்டமிட்டு அவர்களுக்கும் எங்களுக்கும் இல்லாமல் போனது குறைபாடுகள் குற்றங்களோடு மீண்டும் ஒரு மாகாணசபைத் தேர்தல் வந்தால் கிழக்கு மக்களினுடைய அடையாளத்தை எவ்வாறு உறுதிப்படுத்துவது அதற்காக எப்படி வெற்றி வாய்ப்புக்களை அதிகப்படுத்திக்கொள்வது என்பது பற்றி பல கருத்தாடல்கள் உரையாடல்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.

இதில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி பிரதான பங்கை எடுக்க வேண்டும். அந்த பங்கிலே நம்பிக்கையாக நிலைத்து நிற்கக்கூடிய ஆட்சியை தக்கவைக்க முடியும் என்ற ஒரு கருத்தை உருவாக்குவதற்கு என்ன வழி என்று ஆராய்கின்றோம். அதற்கு தமிழர் விடுதலைப்புலி கட்சி தலைமைத்துவம் வழங்குவதும் தேவைப்பட்டால் நான் தேர்தலிலே இறங்கவேண்டி வந்தாலும் அதை சிந்திக்கின்ற நிலைமையிலே கட்சி இருக்கின்றது.



**தொடரும்...**

**நேர்காணல் : இரணியன்**



# பல்சுவை கதம்பம்



## பெண்களின் அழகை கூட்டும் இயற்கை அழகு குறிப்புகள்....!

முகத்தில் உள்ள முடிகளை அகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும். காய்ந்தவுடன் மெதுவாக பிய்த்து எடுத்தால் முட்டையுடன் முடியும் எளிதில் வரும்.

சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாற கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.



தலை முடி செழித்து வளர வெந்தயத்தை ஊறவைத்து நன்கு அரைத்து தலையில் பேக் போல போட்டு ஊறிய பிறகு தலைக்கு குளிக்க வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் பலன் தரும்.

சருமம் நிறம் அதிகரிக்க ஆப்பிள் விழுது இரண்டு டீஸ்பூன், பால்பவுடர் அரை டீஸ்பூன், பார்லி பவுடர் அரை டீஸ்பூன் மூன்றையும் கலந்து முகத்தில் போட்டு அரை மணி நேரம் கழித்து கழுவினால் முகம் மின்னல் போல மின்னும்.

கண்கள் பிரகாசமாக இருக்க இளம் சூடான ஒரு லிட்டர் நீரில், இரண்டு ஸ்பூன் உப்பைப் போட்டு, கண்களை கழுவுதல் வேண்டும். கருவளையம் நீங்க ஆரஞ்சு பழத்தின் சக்கையை கண்கள் மீது அரைமணி நேரம் வைத்திருந்து குளிர்ந்த நீரில் முகத்தை கழுவினால் கருவளையம் காணாமல் போய்விடும்.

மருதாணி நன்கு சிவக்க மருதாணி போடும் முன் கையில் எலுமிச்சை பழ சாறு தடவி உலர விட்டு பிறகு போட்டால் மருதாணி நன்கு சிவக்கும்.

## கணவாய் மீன் வறுவல்

வார விடுமுறைகளில் வித்தியாசமாக என்ன சமையல் செய்யலாம் என்று யோசிப்பவர்கள் கணவாய் மீன் வறுவல் செய்து அசத்தலாம்.

தேவையான பொருட்கள் :
கணவாய் மீன் - 300 கிராம்
இஞ்சி விழுது - 2 மேசைகரண்டி
பூண்டு விழுது - 2 மேசைகரண்டி
வெங்காயம் - 1
கறிவேப்பிலை - 15
தக்காளிப் பழம் - 1
எண்ணெய் - 2 மேசைகரண்டி
கொத்தமல்லி இலை - தேவையான அளவு
பெருஞ்சீரகம் - அரை ஸ்பூன்
கடுகு - அரை ஸ்பூன்
மிளகாய்த் தூள் - 1 ஸ்பூன்
மஞ்சள் தூள் - அரை ஸ்பூன்
கரம்மசாலா தூள் - 1 ஸ்பூன்
உப்பு - தேவையான அளவு



செய்முறை:

வெங்காயம், தக்காளி, கொத்தமல்லி இலை இவற்றை சிறிய துண்டுகளாக வெட்டி வைக்கவும்.

கணவாய் மீனை நன்றாக சுத்தம் செய்து துண்டுகளாக நறுக்கி ஒரு பாத்திரத்தில் போட்டு அத்துடன் உப்பு, மிளகாய்த் தூள், கரம்மசாலத்தூள், மஞ்சள் தூள், இஞ்சி, பூண்டு விழுது, இவற்றை சேர்த்து நன்றாக கலந்து அரை மணிநேரம் ஊற வைக்கவும்.

கடாயை அடுப்பில் வைத்து எண்ணெயை விட்டு காய்ந்ததும் கடுகு, பெருஞ்சீரகம், கறிவேப்பிலை போட்டு தாளித்த பின், வெங்காயத்தை போட்டு நன்றாக வதக்கவும்.

வெங்காயம் நன்றாக வதங்கியதும் தக்காளியை போட்டு வதக்கவும்.

அடுத்து அதில் ஊறவைத்த கணவாய் மீன் கலவையை போட்டு, கலந்து மூடியால் மூடி விடவும். (அடுப்பு நெருப்பையும் மிதமான அளவில் விடவும்)

20 நிமிடங்களில் கணவாய் வெந்து விடும். சட்டியில் உள்ள நீர்த்தன்மை முழுவதும் வற்றி எண்ணெய் பிரிந்து டிரையாக, உதிரியாக வரும் போது கொத்தமல்லி இலையும் சேர்த்து ஒரு நிமிடம் மூடி இறக்கி விடுங்கள்.

சுவையான கணவாய் மீன் பொரியல் ரெடி.

குறிப்பு: இதனை ஒரு வார விடுமுறையில், சனிக்கிழமைகளில் செய்து சாப்பிடுங்கள். காரணம் சிலருக்கு கணவாய் சாப்பிட்டால் வயிற்றுக் கோளாறு ஏற்படுமாம்.

## பொடுகு தொல்லையை போக்கும் எளிய வழிகள்

எலுமிச்சைச் சாறு, தேங்காய் எண்ணெய் இரண்டிலும் தலா இரண்டு டேபிள்ஸ்பூன் எடுத்து நன்றாகக் கலந்துகொள்ளவும். இந்தக் கலவையை தலைமுடியில் மசாஜ் செய்வதுபோலத் தேய்த்து, 20 நிமிடங்கள் வரை ஊறவைக்க ஊறவைக்க வேண்டும். பிறகு ஷாம்பூ தேய்த்து, தலையை அலச வேண்டும். ... எலுமிச்சைச் சாறு பொடுகுத் தொல்லையை நீக்கி, முடி வளர்ச்சிக்கு உதவும்.

கூந்தல் உதிர்வதற்கான பல்வேறு காரணங்களுள் ஒன்று, பொடுகு. சிலருக்கு பொடுகு காரணமாக தலையில் அரிப்பு ஏற்படும்.

இது போன்ற பொடுகு பிரச்சனையால் அவதிப்படுபவர்களுக்காக, சில இயற்கை மருத்துவ குறிப்புகளை பார்க்கலாம்.

முதல்நாள் சாதம் வடித்த கஞ்சியை எடுத்து வைத்து, மறுநாள் அதை தலையில் தேய்த்து குளித்தால், பொடுகு நீங்கும்.

தேங்காய் எண்ணெயில் வெந்தயத்தை சேர்த்துக் காய்ச்சி, தலையில் தேய்த்து வரலாம்.

தேங்காய் பால் எடுத்த பின் கையை தலையில் நன்றாகத் தேய்த்து, சிறிது நேரம் கழித்து மிதமான நீரில் தலையை அலசினால் பொடுகு, மறைந்து விடும்.

வாரம் ஒரு முறை, மருதாணி இலையை அரைத்து, சிறிதளவு தயிர் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து தலையில் தேய்த்தால், பொடுகு தொல்லை நீங்கும்.

தயிர், முட்டையின் வெள்ளைக் கரு மற்றும் எலுமிச்சை சாறு கலந்து தலையில் தேய்த்துக் குளிக்க பொடுகு மறையும்.

வால் மிளகு தூளுடன் பால் சேர்த்து தலையில் தேய்த்து சில நிமிடங்கள் ஊறிய பின் குளித்தால், பொடுகு தொல்லை நீங்கும்.

வெந்தயத்தை தலைக்கு தேய்த்து குளித்தால், உடல் உஷ்ணம் குறைவதுடன் பொடுகு தொல்லை நீங்கும்.

வசம்பை நன்கு பவுடராக்கி, தேங்காய் எண்ணெய்யில் ஊற வைத்து, அந்த எண்ணெய்யை தலையில் தேய்த்து வந்தால் பொடுகு மறைந்து போகும்.

வேப்பிலை கொழுந்து, துளசி ஆகியவற்றை நைசாக அரைத்துத் தலையில் தேய்த்து சிறிது நேரம் கழித்து குளித்தால் பொடுகு தொல்லை நீங்கும்.

எலுமிச்சம் பழச்சாறுடன், தயிர் மற்றும் பச்சை பயிறு மாவு கலந்து தலையில் தேய்த்து சில நிமிடங்கள் கழித்து ஷாம்பு போட்டு குளித்தாலும் பொடுகு நீங்கும்.

தலைக்கு குளிக்கும் போது, கடைசியாக குளிக்கும் தண்ணீரில், வினிகர் கலந்து குளித்தால், பொடுகு நீங்கும்.

நெல்லிக்காய் தூள், வெந்தயப் பொடி, தயிர் மற்றும் கடலைமாவு கலந்து தலையில் தேய்த்து, சிறிது நேரம் கழித்து குளிக்க வேண்டும். இவ்வாறு வாரம் ஒரு முறை செய்து வர பொடுகு நீங்கும்.



என் வாழ்க்கையில் மறக்க
முடியாத நிமிடங்களை உன்னோடு
வாழ்ந்து விட்டேன் இந்த
நினைவுகள் ஒன்றே போதும்
என் உயிர் நீங்கும் வரை
உனக்கு என் நினைவு வந்தால்
என்னை தேடாதே உன்
இதயத்தைத் தொட்டுப்பார்
நான் துடிப்பேன்..
உன் நினைவுகளோடு.



# கோத்தா கொலை முயற்சி என்ற போர்வையில் பழிவாங்கப்பட்ட தமிழர்களும் மறைக்கப்படும் உண்மைகளும்



கோத்தபாயாவை கொலை செய்ய முயற்சித்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த 14 வருடங்கள் சிறையில் அடைத்து வைக்கப்பட்ட தமிழ் அரசியல்க்கைதி சந்திரபோஸ் செல்வச்சந்திரன் ஈற்றில் நிரபராதி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார். இக்காலப்பகுதியில் வேறு அவர் புற்றுநோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளார். ஒரு தமிழ் இளையவனின் வாழ்வியலை அநியாயமாக அழித்து அவனை செய்யாத குற்றத்திற்காக இவ்வாறு தண்டித்தமைக்கு சிங்களத்தில் யார் முதலில் பொறுப்பேற்க்கப் போகிறார்கள்? நான் இங்கு முதலில் என்றே குறிப்பிட்டேன். அதை செய்ய வேண்டிய பட்டியலில் பலர் உள்ளனர். இருக்க விடுதலை என மட்டும் அறிவிக்கும் நீதிமன்றங்கள் நட்டஈடு உட்பட இதற்கான பரிகாரங்கள் எதுவும் குறித்து வாழா இருப்பது ஏன்? தமிழர் என்ற அசமந்தப் போக்கா? இதற்கு முன்னர் கடந்த ஆண்டு 2018 யூலையில் சைவ மதக்குரு சிறீஸ்கந்தராசா 13 வருடங்களின் பின்னர் குற்றவாளியல்ல எனத் தீர்ப்பளிக்கப்பட்டு இதே குற்றத்திற்காக விடுதலை செய்யப்பட்டார் என்பது இங்கு வலியுறுத்த வேண்டிய விடயம். இருவர் விடயத்திலும் அவர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே அவர்கள் குற்றவாளிகள் என குற்றஞ்சாட்டப்பட்டனர். தாங்கள் வழங்கிய வாக்குமூலம் தாம் சுயாதீனமாக வழங்கியதல்ல என இருவரும் தெரிவித்ததை அடுத்து மேற்கொண்டு எவ்வித தடயங்களையோ சாட்சியங்களையோ வழங்கத்தவறிய நிலையிலேயே இவ்விடுதலைகள் நிகழ்ந்துள்ளன. அவ்வாறாயின் அதற்கு ஏன் முறையே 13 மற்றும் 14 வருடங்கள் சிறீலங்காநீதித்துறைக்கு தேவைப்பட்டது? ஒரே காரணத்திற்காக விடுதலை செய்யப்பட்ட இருவரையும் ஒன்றாக விடாது ஏன் ஒரு வருடம் 5 மாதங்கள் இடைவெளியில் விடுதலை செய்ய வேண்டும்? உலகமே ஏற்றுக் கொண்ட இலங்கைத்தீவில் தமிழருக்கு ஒரு நீதி சிங்களவருக்கு ஒரு நீதி தான் மீண்டும் காரணமா? இங்கு இன்னுமொரு விடயத்தையும் உங்கள் கவனத்திற்கு கொண்டு வருதல் அவசியமாகிறது. கோத்தா மீது 2006 டிசம்பர் 1ஆம் நாள் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல் எனச் சொல்லப்பட்ட விடயம் குறித்து கோத்தாவின் நெருங்கிய சகாவும் அப்போதைய இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா 2016 மே இல் பாராளுமன்றத்தில் பேசும் போது இவ்விடயம் குறித்து பெரும் குண்டொன்றைத் தூக்கிப் போட்டார். அவர் சொன்னார் கோத்தபாயா மீதான தாக்குதல் உள்ளக வேலை. ராஜபக்ச குடும்பம் மீதான மக்கள் ஆதரவை அதிகரிக்கும் வகையிலேயே கோத்தபாயவினால் திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்டதே அத் தாக்குதல் என்றார். 25 மீற்றருக்கு தள்ளி வைத்து யாராவது குண்டை வெடிப்பார்களா? என வேறு போட்டுடைத்தார். அவ் குண்டு வெடிப்பில் கோத்தா எவ்வித பெரும் காயங்களுக்கும் ஆளாகவில்லை.

இச்சம்பத்தைக் காரணமாகக் காட்டி புலிகளுடனான அனைத்துத் தொடர்புகளையும் துண்டிக்குமாறு நோர்வேயைப் பணித்த ராஜபக்ச தரப்பு. பின்னர் போர் நிறுத்தத்தில் இருந்து வெளியேறி இராணுவ நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தினர் என்பது வரலாறு. ஆகமொத்தத்தில் தம் சிங்கள மக்களை அணிதிரட்டவும், சர்வதேச சமூகத்தை ஏய்க்கவும் ஆடிய நாடகத்தில் அவர்கள் அனைவரும் பலியானது மட்டுமன்றி, அதை நிஜமெனக்காட்ட பலியாக்கப்பட்ட தமிழர்கள் தற்போது என்னவாகியிருக்கிறார்கள் என்பது மேலும் ஒரு துன்பியல் நிகழ்வு.

சோழியன் குடுமி சும்மா ஆடாது 'குதிரை ஓடியபிறகு லாயத்தை மூடிய கதை'யாக, மக்களை அணி திரட்டும் பணியில் கூட்டமைப்பு களமிறங்கப்போகின்றதாம். 'எமது இனத்திற்கு விரோதமாக இந்த அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளிற்கு எதிராக மக்களை அணிதிரட்டுவதற்கு தமது கட்சியின் இளைஞர்கள், தொண்டர்கள் மற்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தயாராக வேண்டும்' என தமிழரசு கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா அறைகூவல் விடுத்திருந்தார்.

தமிழரசு கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞர் மற்றும் மகளிர் அணியின் ஏற்பாட்டில் கட்சியின் 70ம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வு இடம்பெற்றது. அங்குதான் புற்றுக்குள் இருந்து வெளியே வந்து சீறும் பாம்பாகச் சீறியிருக்கின்றார் மாவையர் இனமழிந்த கடந்த பத்து வருடங்களாக சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களுக்கு சாமரம் வீசிக்கொண்டிருந்துவிட்டு, இப்போது மக்களை அணிதிரட்டி ஏதோ வெட்டிக்கிழிக்கப்போவதாக மாவையர் திருவாய் மலர்ந்தருளியிருப்பது, தமிழர்களுக்கு நல்லது நடக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்திலல்ல, நாடாளுமன்றத் தேர்தலிலையும் வெற்றிபெற்று அரியாசனத்திலை அமரவேண்டும் என்ற அதீத எதிர்பார்ப்புத்தான்.

அதுசரி, சோழியன் குடுமி சும்மா ஒன்றும் ஆடாது.கத்துக்குட்டியின்வரலாற்றுத் திரிப்பு.

தமிழர்கள் வாழ்ந்த தேசம் தமிழீழம். அந்தத் தேசத்தை மீட்பதற்குத்தான் தமிழ் மக்கள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்துப் போராடினார்கள். அளப்பரிய தியாகத்தை செய்திருக்கின்றார்கள். ஆனால், சிங்களவர்களுடைய நாட்டில் தமிழீழம் கேட்பதுபோன்று அரசியல் கத்துக்குட்டி எம்.ஏ.சுமந்திரன் கூறியிருக்கின்றார். இலங்கை தமிழரசுக்கட்சியின் 70வது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதுதான் அவர் இதனைச் சொல்லியிருக்கின்றார். அவர் சொன்னதை நீங்கள் ஒருக்கா வடிவாகக் கேளுங்கோ?"நீங்கள் எங்களையும் உங்கள் தேசத்தில் உள்வாங்கி எமக்கும் உரிய உரிமைகளை வழங்கி வாழ விருப்பமில்லை என்று சொன்ன காரணத்தினாலே எங்களை தனியே போகவிடுங்கள் என்ற தீர்மானத்தினை வட்டுக்கோட்டையில் நாங்கள் நிறைவேற்றினோம்" என்று சொல்லியிருக்கின்றார்.

தமிழினத்தின் வரலாறு தெரியாத ஒருத்தரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு நுழைக்கும்போதே, எதிர்காலத்தில் தமிழர்களை நாசமாக்கவே நுழைக்கப்பட்டார் என்பது அனைவருக்கும் புரிந்திருந்தது.கொடுத்த வேலையை சுமந்திரன் கனகச்சிதமாகவே செய்துகொண்டிருக்கின்றார்.அதுசரி, கொடுத்த காசுக்கு கூவத்தானே வேணும். வரலாறு, போராட்டம், கொள்கை தெரியாத கூட்டமைப்பும் இலங்கைத் தீவில் தமிழினம் ஒரு தேசிய இனம் என்பதில் விடுதலைப் புலிகள் மிக உறுதியாகவே இருந்தார்கள். 'தமிழ் மக்கள் சிறுபான்மை இனமல்ல' என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அவர்கள் ஆதாரபூர்வமாக நிரூபித்துள்ளார்கள்.

விடுதலைப் புலிகளின் இந்தக் கோட்பாடுகள் தெரியாமல் வேற்றுக்கிரகத்தில் இருந்துவந்தவர்களைப்போல், தமிழ் மக்களை சிறுபான்மை இனமாக்குவதில் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முனைந்திருக்கின்றது. கைதடி விநாயகர் முன்பள்ளி பரிசளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ .சரவணபவன் தமிழ் மக்களை சிறுபான்மை இனம் என்று குறிப்பிட்டுள்ளார். தமிழர்களின் வரலாறு, போராட்டம், கொள்கை எதுவும் தெரியாத இவர்கள் எல்லாம் எப்படித்தான் கூட்டமைப்பிற்குள் நுழைந்தார்களோ..? "எங்களுடைய முழு உரிமையை பறிக்கும் செயல் இந்த தேசிய கீதப் பிரச்சனை, ஒரு தேசிய இனம் தான் இருக்கின்றது. அதற்கு கட்டுப்படுங்கள் என்று சொல்கிறார்கள், அப்போ நாங்கள் வந்தேறு குடிகள்,அடிமைகளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். சிறுபான்மையினம் தாங்களே ஒரு தேசியகீதத்தை உருவாக்கி படிக்கட்டும் என்று எதிர்பார்க்கிறார்களோ தெரியாது" என்று சரவணபவன் ஆதங்கப்பட்டிருக்கின்றார்.

அதுசரி, வேலியே பயிரை மேயும்போது, மாட்டுக்கடித்து என்ன பயன்? காணாமல் ஆக்கப்பட்ட என்னுடைய பிள்ளையென சிங்கள மொழி பேசும் பிள்ளையை காட்டினார்கள்! ஜெயவனிதா காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவரவே இரண்டாம் மாடி விசாரணைக்கு அழைத்திருந்தார்கள் என காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் வவுனியா மாவட்ட சங்கத் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா தெரிவித்துள்ளார். வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக 1060 நாட்களாக போராட்டம் மேற்கொள்ளும் பந்தலில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், கொழும்பிலுள்ள இரண்டாம் மாடி விசாரணைக்காக நானும் என்னுடைய கணவரும் போயிருந்தோம். உங்களுடைய பிள்ளை இதுதானா எனக் கூறி ஒரு பெண் பிள்ளையை காட்டினார்கள். இது என்னுடைய பிள்ளை இல்லையென்று கூறி மறுத்தேன். இல்லை நீங்கள் படத்தில் காட்டும் பிள்ளை தான் இந்த பிள்ளை எனக் கூறினார்கள். என்னுடைய பிள்ளைக்கும் நீங்கள் காட்டும் பிள்ளைக்கும் வித்தியாசம் உள்ளது. இதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். பொலன்னறுவையிலிருந்து சிங்கள மொழி பேசுகின்ற பிள்ளையை கொண்டுவந்திருந்தார்கள். எங்களுடைய பிள்ளைகள் தமிழ் பேசும் பிள்ளைகள். இதனை நான் ஏற்றுக்கொள்ள முடியாதென்று கூறி நான் முற்றுமுழுதாக மறுப்பு தெரிவித்திருந்தேன். இந்த பிரச்சினையை இத்தோடு முடிவுக்கு கொண்டு வர வேண்டும். அதுதான் நாங்கள் இவ்வளவு காலமும் எடுத்த முடிவு. இன்றைக்கு தான் எங்களுக்கு கையில் பிள்ளை கிடைத்திருக்கிறது. அதனால் தான் நாங்கள் இன்று உங்களை விசாரணைக்கு கூப்பிட்டிருப்பதாக அவர்கள் கூறினார்கள். நீங்கள் பிரச்சினையை முடிக்கலாம். ஆனால் என்னுடைய பிள்ளையென கூறி பிரச்சினையை முடிக்க வேண்டாம் என கூறியிருந்தேன்.படத்தில் இருப்பது என்னுடைய பிள்ளை. ஆனால் நீங்கள் கொண்டு வந்து காட்டிய பிள்ளை என்னுடையதில்லை. படத்தில் இருப்பது தான் என்னுடைய பிள்ளை என உறுதியாக கூறியிருந்தேன். இப்போது அவர்களுக்கு எங்களுடைய போராட்டத்தை மழுங்கடிக்கிறது தான் அவர்களுடைய நோக்கமாகவுள்ளது.

நீங்கள் தான் காணாமல் போன சங்கத்தின் தலைவியா என என்னிடம் கேட்டிருந்தார்கள். நான் ஓமென கூறியிருந்தேன். நான் என்னுடைய பிள்ளை மட்டும் தான் காணாமல் போனதென கேட்கவில்லை. எல்லா தாய்மார்களுடைய பிள்ளைகளையும் தான் கேட்டுக்கொண்டிருக்கிறோம். என்னுடைய பிள்ளைக்காக மட்டும் நான் குரல் கொடுக்கவில்லை. எல்லோருடைய பிள்ளைகளுக்காகவும் தான் குரல் கொடுக்கின்றேன். என்னுடைய பிரச்சினையை முடிக்கவும் இயலாது. போராட்டத்தில் ஈடுபடும் தாய்மார்களுக்கு எங்களுடைய தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றாக குரல் கொடுப்போம். நாங்கள் உண்மையாக வெளிநாடுகளை தான் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எங்களுடைய பிள்ளைகளிற்கு சரியான ஒரு தீர்வு கிடைப்பதாக இருந்தால் வெளிநாடுகள் தான் வரவேண்டும். அன்றைய விசாரணையின் போது அவர்களிடமும் நான் அதனை கூறியிருந்தேன். வெளிநாடுகள் வந்து எங்களுடைய பிரச்சினையை முடிப்பதாக இருந்தால் நாங்கள் அதனை ஏற்றுக்கொள்வோம் என கூறியிருந்தேன். நீங்கள் சரியான முறையில் பிரச்சினையை முடிக்க மாட்டீர்கள். இவ்வாறு எல்லோரும் தனித்தனியாக இருந்தால் ஒவ்வொருவராக விசாரணைக்கு கூப்பிட்டு எங்களுடைய போராட்டங்களை மளுங்கடிக்க செய்துவிடுவார்கள். எல்லா தாய்மாரும் ஒன்றாக இணைந்து வெளிநாட்டினுடைய உதவியை கேட்பதாக இருந்தால் இரண்டு, மூன்று மாதங்களில் தீர்வினை பெறமுடியும்.

தமிழ் மக்கள் அனைவருக்கும் சேர்த்தே நான் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். தமிழருடைய பிரச்சினை தீரவேண்டும்.நானும் ஒரு தமிழன் தான் எங்களுடைய பிரச்சினை தீர்ந்தால் தான் முற்றுமுழுதாக இலங்கையில் தமிழ் மக்களுடைய பிரச்சினை தீர்விற்கு சமன். மழுங்கடிக்கும் நோக்குடனே இந்த விசாரணை பிரிவிற்கு ஒவ்வொருவரையும் கூப்பிடுகிறார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தின் போது காணாமல் போன நிலையில் ஜனாதிபதியுடன் புகைப்படத்தில்காணப்பட்ட தனது மகள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைதிரிபால சிறிசேனவே உரிய பதிலை வழங்கவேண்டும் என காணாமல் போன காசிப்பிள்ளை ஜெரோமியின் தாய் காசிப்பிள்ளை ஜெயவனிதா கோரிக்கை விடுத்துள்ளார். தனது மகள் உயிருடன் இருப்பதாக நம்பிக்கை வெளியிட்ட காசிப்பிள்ளை ஜெயவனிதா ஒருமுறையாவது தமது மகளை காட்டுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

14ஆம் பக்கம் பார்க்க

தமிழ்வெறியன்



# விடுதலைப்புலிகளின் ஆயுத போராட்ட மௌனிப்பும் உலக வல்லரசுகளின் பிடிக்குள் இலங்கை அரசும்

இன்றைய கால சூழ்நிலையில் 2021 ஆம் ஆண்டு என்பது உலகளாவிய ரீதியில் கொரோனா வைரசுடன் ஆரம்பித்ததொன்றாகும். இவ் செயற்பாடுகள் இன்று எதனை கூற நிற்கின்றன? கொரோனா வைரஸினுடைய தாக்கம் என்பது உலகளவில் பல உயிர்களை காவு கொண்டுள்ளது. அரசியல் ரீதியாக இன்றைய பூகோள நிலைப்பாடு என்பது வர்த்தக ரீதியான அணுகுமுறையும் சர்வதிகார நிலைப்பாடும் என்பதாகும். குறிப்பாக அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை அபிவிருத்தியடையவிடாது அவர்களை தமது பொருளாதார வலைக்குள் சிக்க வைப்பதே இவர்களுடைய பிரதான நோக்கம்.

பொருளாதார ரீதியாக ஒரு நாடு முன்னேற்றம் அடைந்தால் அந்த நாடு உலகளாவிய ரீதியில் பாரிய அபிவிருத்தியை அடைந்துவிடும். ஆகவே அபிவிருத்தியடைந்த நாடுகள் இவ்வாறு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை புறக்கணிப்பதும் அங்கு பொருளாதார தடைகளை ஏற்படுத்துவதும் யுத்த சூழ்நிலைகளை உருவாக்குவதும் போன்ற விடயங்களையே இவர்கள் மேற்கொள்கிறார்கள்.

உலக வல்லரசுகளில் அமெரிக்காவா சீனாவா என்ற நிலைப்பாடு தோற்றம் பெற்றமையினாலேயே தான் வல்லரசு என்று உலகளாவிய ரீதியில் நிரூபித்து காட்டுகின்ற ஒரு செயற்பாடாகவே சீன அரசாங்கம் இந்த கொரோனா வைரஸை வுகான் நகரில் முதலில் பரப்பியது. அந்த பிரதேசத்தில் அதனுடைய வீரியம் தாங்கள் நினைத்தவாறு வெற்றியடைந்தமையினால் அதை உலக நாடுகள் முழுவதுக்கும் பரப்பி தம்முடைய வியாபாரத்தையும் சர்வதிகாரத்தையும் நிலைநாட்டுகின்ற ஒரு செயல் வடிவமாக சீனா அரசு பூகோள அரசியலாக இதனை மாற்றியுள்ளது. கோடிக்கணக்கில் வருமானத்தை ஈட்டிக்கொடுக்கின்ற ஒரு வியாபாரத்தையே இந்த கொரோனா வைரஸினுடைய தாக்கம் ஏற்படுத்தியுள்ளது. மாஸ்க், வென்டிலேட்டர், தடுப்பூசி, கொரோனா தடுப்பு அங்கிகள் போன்றவற்றை தயாரித்து பீ.சி.ஆர் பரிசோதனைப் பொருட்கள் போன்றவற்றையும் சந்தைப்படுத்தி ஏனைய நாடுகளைவிட முன்னேற்றத்தை கண்டுள்ளது. எந்தவொரு நாடுகளும் ஒரு இரசாயனத்தை கண்டு பிடித்தால் அந்த இரசாயனத்திற்கு எதிரானதொன்றை கண்டுபிடித்ததன் பின்னரே குறித்த இரசாயனத்தையோ அல்லது அந்த வைரஸையோ பரப்பிவிடும். அப்பொழுது குறித்த கொரோனா வைரஸிற்கு மருந்து கண்டுபிடிப்பதற்கு பல ஆண்டுகள் கடந்து செல்வதற்கு முன்னர் இதற்காக பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட பொருட்கள் தற்பாதுகாப்பு தடுப்பூசிகள் பலவற்றையும் மருத்துவ வியாபார சந்தையில் சீன அரசாங்கம் விற்றுவிடும். ஆகவே குறித்த நாடுகள் சீன அரசாங்கத்திடம் குறித்த மாதிரிகளை பெற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுவார்கள். அதுவே தற்பொழுது நடைமுறையிலும் உள்ளன.

சீன நாட்டை எதிர்க்கும் அளவிற்கு அமெரிக்கா, ரஷ்யா, இஸ்ரேயல் போன்ற நாடுகள் முன்வருவார்களா? என்பது கேள்விக்குறி. ஆனால் அமெரிக்கா திட்டமிட்டு சீனா மீது ஒரு போரை தொடுத்தால் அதற்கு ஆதரவாக பல நாடுகள் தமது பங்களிப்பை வழங்கும். இன்று உலகளாவிய ரீதியில் சீன நாட்டை எதிர்க்க எந்தவொரு நாடும் அந்த தகுதியை இழந்துள்ளது. பொருளாதார ரீதியில் பல்வேறு நாடுகளில் தமது வர்த்தகத்தை சீன நாடு நிலைஊன்றியுள்ளது. ஒவ்வொரு நாடுகளின் தலைநகர்களை எடுத்துக்கொண்டாலும் அங்கு சீன கொலனியாகவே காட்சியளிக்கும். அந்தளவு தூரம் டிஜிட்டல் வேல்ட் வளர்ச்சியடைந்துள்ளது எனலாம். குறிப்பாக இலங்கையை மையப்படுத்தி தாமரைத் தடாகம் ஒன்று சீன நாட்டால் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கை விமான நிலையத்திற்கு வந்திறங்கும் போதும் அல்லது இலங்கையின் ஏனைய இடங்களிற்கு வருகை தந்திறங்கும் போதும் தாமரை தடாகத்தின் உச்சி தெரியும். அந்த தாமரை தடாகத்தினை ஒரு சிலபேரை தவிர வேறு யாரும் அந்த பெயரால் அழைப்பதில்லை. சீன டவர் என்றே அழைப்பர். அந்தளவிற்கு அந்த பெயர் அழுத்தம் பெற்றிருக்கின்றது. இவ்வாறு ஆசிய ஐரோப்பிய நாடுகளில் பெரும்பாலும் சீன ஆக்கிரமிப்பு இருந்து கொண்டு தான் இருக்கிறது.

ஆகவே சீன பொருளாதாரம் என்பது ஆயுத ரீதியாகவும் பொருட்கள் ரீதியாகவும் இரசாயன ரீதியாகவும் மருத்துவ ரீதியாகவும் கட்டுமான ரீதியாகவும் உலகளாவிய ரீதியில் முதலிடத்தை பெற்றிருப்பதனால் எதிர்வரும் காலங்களில் அதனை அசைக்கமுடியாத சூழ்நிலை உருவாகும். குறிப்பாக பெருந்தெருக்கள் பாலங்கள் கொண்ட நாட்டில் இல்லை என்று கண்டால் அதனை ஆயிரம் கிலோ மீற்றர் அல்லது ஐயாயிரம் கிலோ மீற்றர் வரையும் அமைக்க கூடிய திறன் கொண்ட நாடாக சீனா விளங்குகின்றது. மேம்பாலம் நீருக்கடியில் புகையிரதப்பாதை போன்றவைகளும் சர்வதேச ரீதியாக இடம் பிடித்தவையே. குறிப்பாக இலங்கையை பொருத்தவரை 30 வருட காலங்கள் நீண்ட யுத்தம் இடம் பெற்றது. இந்த யுத்தத்திலிருந்து தமிழ் மக்கள் இன்னமும் மீட்சி பெறவில்லை. அதற்குள் கொரோனா வைரசினுடைய தாக்கம் இரண்டாம்,மூன்றாம்,நான்காம் அலையென அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதனை இலங்கை அரசு கட்டுப்படுத்துவதற்கு பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. தற்பொழுது சீனா நாட்டின் உதவியையே நம்பிசுற்றுலாவை திறந்துவிட்டுள்ளது. இதனால் கொரோனா வைரசினுடைய தாக்கம் அதிகரிப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளது. இதனோடு கூட அமெரிக்காவும் இந்தியாவும் சீன நாட்டை இலங்கையில் இருந்து வெளியேற்றுவதற்கான சதித்திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

இலங்கையில் சீனாவின் முதலீடு என்பது அதனை கணக்கீடு செய்ய முடியாதுள்ளது. கோல்பேஸ் கடல் பரப்பையே விலைக்கு வாங்கியுள்ளது என்றே கூற வேண்டும். கொழும்பு தலை நகரம் சீனா மயமாக்கம் என்றே கூறலாம். இனிவரும் காலங்களில் ஆயுதங்களை கொண்டு போரிடம்பெறும் என்பது கேள்விக்குறியாக இருக்கும் நேரத்தில் இரசாயனங்களை பயன்படுத்தி குறித்த நாடுகளை அழிக்கும் செயல்திட்டத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகள் செயற்படும். இதனை நாம் கட்டுப்படுத்த வேண்டும் அல்லது இல்லாதொழிக்க வேண்டும் என்றால் கிராமிய மட்டத்திலும் நாடு தழுவிய ரீதியிலும் பொருளாதார உற்பத்திகளை மெற்கொள்ள வேண்டும். விவசாயத்தை ஊக்குவிப்பதனூ டாக அந்நிய நாடுகளுக்கு அடிபணியாது வடகிழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது சிவில் நிர்வாகத்தை 30 வருடங்கள் வைத்திருந்த காலகட்டத்தில் எந்தவொரு அந்நிய நாடுகளின் சக்திகளும் இந்த நாட்டுக்குள் வருவது தடுக்கப்பட்டிருந்தது. ஆகவே தான் குறித்த நாடுகள் தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த நாட்டில் நிலை கொண்டிருந்தால் தங்களுடைய இப்படிப்பட்ட நாசகார வேலைகளை செய்ய முடியாது என்ற காரணத்தினால் இந்தியா சீனா அமெரிக்கா உட்பட 57 நாடுகள் இணைந்து போரிட்டு தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய போராட்டத்தை மௌனிக்க செய்தார்கள். அதனுடைய விளைவை இன்று அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது எனலாம். 58 பயங்கரவாத நாடுகளும் தமிழீழவிடுதலைப்புலிகள் ஒரு இனத்துக்காக போராடியவர்கள் என்பது சர்வதேசம் அறிந்த உண்மை. இதற்கு உதாரணமாக 14 உள்ளூர் பேச்சுவார்த்தைகள் 7 சர்வதேச பேச்சுவார்த்தைகளும் 2004 ஆம் ஆண்டு சமாதான காலகட்டத்தில் இடம்பெற்றிருந்தது என்பது வரலாற்று உண்மை. உலக வரலாற்றில் ஆயிரக்கணக்கான ஊடகவியலாளர்கள் தேசியத்தலைவர் பிரபாகரனை சந்தித்ததும் ஒரு சாதனையாகும். எந்தவொரு தலைவருக்கும் இல்லாத ஒரு தனிச்சிறப்பு கொண்டவராகவே தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் தனது இயக்கத்தை வழிநடத்தி சென்றார் என்பது நிதர்சனமான உண்மை.

ஆகவே இந்த நாடு சுபீட்சமான இன நிலைமையை மேற்கொள்ள வேண்டுமாக இருந்தால் இந்த ஆண்டில் தனிப்பெரும் சக்தியாக மாற்றம் பெற வேண்டும். சீன காலணித்துவத்தை விரட்டியடிப்பதனூடாக இலங்கை நாடு இந்த பூகோள அரசியலில் இருந்து மாற்றம் பெற்ற அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஒன்றாக திகழும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் அதற்கு அரசாங்கம் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே இன்றைய யதார்த்த பூர்வமான உண்மை.

**நெற்றிபொறியன்**

13ஆம் பக்க தொடர்ச்சி...

இறுதிக்கட்ட யுத்தின் போது 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 ஆம் திகதி இரட்டை வாய்க்கால்பகுதியில் வைத்து தனது மகள் காசிப்பிள்ளை ஜெரோமிகாணாமல் போனதாக அவரது தாய்காசிப்பிள்ளை ஜெயவனிதா காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதிஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார். எனினும் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதி தேர்தலுக்காக வெளியிடப்பட்ட நூறுநாட்களில் புதிய நாடு என்ற துண்டுப்பிரசுரத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தனது மகள்காசிப்பிள்ளை ஜெரோமி நிற்பதை தாம் கண்டு கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடிய போதிலும் தனது மகள்தொடர்பில் எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லையென அவர் குறிப்பிட்டார். காணாமல் போன தனது மகள் தொடர்பில் பல ஆணைக்குழுக்களும், புலனாய்வு பிரிவினரும்விசாரணைகளை மேற்கொள்கின்ற போதிலும் உரிய தீர்வு கிடைக்கவில்லையென கவலைவெளியிடும் வனிதா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே தனது மகள் தொடர்பில் உரிய தீர்வைவழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேவேளை, காணாமல் போயுள்ள தனது மகள் காசிப்பிள்ளை ஜெரோமிக்கான அவரது தாய் காசிப்பிள்ளை ஜெயவனிதா கவிதை ஒன்றையும் எழுதி பாடியுள்ளார்.இதேவேளை, மன்னார் மடு பகுதியில் வைத்து காணாமல் போன தனது மகள் நாகஜோதி நாகராசா ஜனாதிபதியுடன் புகைப்படத்தில் காணப்பட்ட போதும் ஜனாதிபதி விடுதலை செய்யாமைக்கான காரணம் என்னவென்று அவரது தாயார் திருமதி நாகராசா கேள்வியெழுப்பியுள்ளார்.

தமிழ் அரசியல்வாதிகள் தமிழ்மக்களது பிரச்சனைகளுக்கான தீர்வுகள் நோக்கி பயணிப்பது காலத்தின் கட்டாயம்.



# உலக பார்வை



## கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 30 கோடியைத் தாண்டியது



உலகம் முழுவதும் கொரோனா வைரசால் குணம் அடைந்தோர் எண்ணிக்கை 25.73 கோடியைக் கடந்துள்ளது. உலகளவில் கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 30 கோடியைத் தாண்டியது

சீனாவின் வுகான் நகரில் வெளிப்பட்ட கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கி வருகிறது. வைரஸ் தொற்று பரவி ஏறத்தாழ ஓராண்டைக் கடந்தும் இதன் வீரியம் குறைந்தபாடில்லை. கொரோனா பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இந்தியா, பிரேசில், பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன.

இந்நிலையில் உலக அளவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 30 கோடியைக் கடந்துள்ளது. கொரோனா வைரசால் குணமடைந்தோர் எண்ணிக்கை 25.73 கோடியைக் கடந்துள்ளது.

மேலும் வைரஸ் தாக்குதலுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 54.88 லட்சத்தைத் தாண்டியுள்ளது. வைரஸ் பரவியவர்களில் 3 கோடிக்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிகிச்சை பெறுபவர்களில் 92 ஆயிரத்துக்கு மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

## சீனாவில் பிறப்பு விகிதம் 1 சதவீதத்துக்கும் கீழ் சரிவு

அதிக மக்கள்தொகை கொண்ட மாகாணங்களில் ஒன்றான ஹெனான் மாகாணத்தில் 1978-ம் ஆண்டுக்கு பிறகு முதல் முறையாக பிறப்பு எண்ணிக்கை 10 லட்சத்துக்கும் கீழ் குறைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகிலேயே அதிக மக்கள்தொகையை கொண்டுள்ள நாடு சீனா. ஆனால் அங்கு சமீபகாலமாக குழந்தைகள் பிறப்பு விகிதம் தொடர்ந்து குறைந்து வருகிறது.

இதை சரிக்கட்ட சீன தம்பதிகள் 2 குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்வதற்கு இருந்த கட்டுப்பாட்டை நீக்கி, இனி 3 குழந்தைகள் பெற்றுக்கொள்ளலாம் என அந்த நாட்டு அரசு கடந்த கடந்த ஆகஸ்டு மாதம் அறிவித்தது. அதை தொடர்ந்து, சீன தம்பதிகள் 3 குழந்தைகளை பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கும் விதமாக அவர்களுக்கு மானியங்கள், வரிக்குறைப்பு, பேருகால விடுமுறை உள்ளிட்ட சலுகைகளை மாகாண அரசுகள் அறிவித்துள்ளன.

இந்த நிலையில் கடந்த 2020-ம் ஆண்டில் சீனாவின் 10 மாகாணங்களில் பிறப்பு விகிதம் 1 சதவீதத்துக்கும் கீழ் குறைந்ததாக புள்ளிவிவர தகவல்கள் வெளியாகியுள்ளன.குறிப்பாக அதிக மக்கள்தொகை கொண்ட மாகாணங்களில் ஒன்றான ஹெனான் மாகாணத்தில் 1978-ம் ஆண்டுக்கு பிறகு முதல் முறையாக பிறப்பு எண்ணிக்கை 10 லட்சத்துக்கும் கீழ் குறைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2020-ம் ஆண்டில் ஒட்டுமொத்தமாக சீனாவின் பிறப்பு விகிதம் 1,000 பேருக்கு 8.52 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் இது 43 ஆண்டுகளில் மிகக் குறைவு என்றும் அந்த புள்ளி விவர தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இந்தியா உள்ளிட்ட 7 நாடுகளின் விமான சேவைக்கு தடை



வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளால் ஒமைக்ரான் பரவுவதால் விமான சேவைகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கடந்த சில தினங்களாக கொரோனா தொற்று மீண்டும் அதிகரித்து வருகிறது. அன்று(06) காலை நிலவரப்படி 58,097 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. அதேபோல 2,135 பேருக்கு ஒமைக்ரான் தொற்று ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தியா உள்ளிட்ட 8 நாடுகளில் இருந்து வரும் விமானங்களுக்கு ஹாங்காங் அரசு தடை விதித்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளிடமிருந்துதான் ஒமைக்ரான் தொற்று அதிகம் பரவுவதாக குறிப்பிட்டுள்ள ஹாங்காங் அரசு, நோய்தொற்று பரவுவதை தடுக்கும் வகையில் இந்தியா, ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், அமெரிக்கா, பாகிஸ்தான், இங்கிலாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய 8 நாடுகளில் இருந்து வரும் விமானங்களுக்கு தடை விதிக்கப்படும்.

இந்த உத்தரவு வரும் சனிக்கிழமை நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் என்றும், 2 வாரங்களுக்கு அமலில் இருக்கும் என்று தெரிவித்துள்ளது.

## கஜகஸ்தான் அரசு ராஜினாமா

அதிபர் காசிம்-ஜோமார்ட் டோகாயேவ் அல்மாட்டி நகரிலும், மேற்கு மங்கிஸ்டாவ் மாகாணத்திலும் 2 வார காலத்துக்கு அவசர நிலைபிரகடனப்படுத்தப்படுவதாக அறிவித்தார். எண்ணெய் வளமிக்க மத்திய ஆசிய நாடான கஜகஸ்தானில் கார்களுக்கு பெரும்பாலும் திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு எரிபொருளாக பயன்படுத்தப்படுகிறது.

இந்த நிலையில் கஜகஸ்தான் அரசு இந்த எரிபொருள் மீதான விலையை அண்மையில் உயர்த்தியது. இது மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியதை தொடர்ந்து, எரிபொருள் விலை உயர்வை கண்டித்து அங்கு போராட்டம் வெடித்தது.

இந்த சூழலில் கஜகஸ்தானின் மிகப்பெரிய நகரமான அல்மாட்டியிலும், மேற்கு மங்கிஸ்டாவ் மாகாணத்திலும் இந்த போராட்டம் வன்முறையாக மாறியது. அல்மாட்டி நகரில் மேயரின் அலுவலகத்தை போராட்டக்காரர்கள் சூறையாடினர்.

இதை தொடர்ந்து போராட்டக்காரர்களை விரட்டியடிக்க போலீசார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியதால் இரு தரப்புக்கும் இடையில் பயங்கர மோதல் வெடித்தது. இதனால் அங்கு தொடர்ந்து அசாதாரண சூழல் நீடிக்கிறது.



இந்தநிலையில் அந்த நாட்டின் அதிபர் காசிம்-ஜோமார்ட் டோகாயேவ் அல்மாட்டி நகரிலும், மேற்கு மங்கிஸ்டாவ் மாகாணத்திலும் 2 வார காலத்துக்கு அவசர நிலை பிரகடன ப்படுத்தப்படுவதாக அறிவித்தார்.

அதோடு திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு மீதான விலையை குறைப்பதாகவும் அவர் அறிவித்தார். ஆனாலும் அங்கு போராட்டமும், வன்முறையும் தொடர்ந்து வருகிறது.

இந்தநிலையில் தொடர் போராட்டம் மற்றும் வன்முறை காரணமாக கஜகஸ்தான் பிரதமர் அஸ்கர் மாமின் தலைமையிலான அரசு ராஜினாமா செய்தது. அரசின் ராஜினாமாவை ஏற்றுக் கொண்ட அதிபர் காசிம், துணைப்பிரதமர் அலிகான்ஸ்மைலோவ் தலைமையில் இடைக்கால அரசை அமைக்க உத்தரவிட்டார்.

## ஹைப்பர்சோனிக் ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்த வட கொரியா!

வட கொரியா ஹைப்பர்சோனிக் ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளதாக, மாநில ஊடக அறிக்கை தெரிவித்துள்ளது. அன்று (புதன்கிழமை) நடப்பு ஆண்டின் நாட்டின் முதல் பெரிய ஆயுத சோதனை முன்னெடுக்கப்பட்டதாக மாநில ஊடகமான கே.சி.என்.ஏ. குறிப்பிட்டுள்ளது. இந்த ஏவுகணை 700 கிமீ (434 மைல்கள்) தொலைவில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை துல்லியமாகத் தாக்கியது என தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானக் கட்டுப்பாடு மற்றும் குளிர்காலத்தில் செயல்படும் திறன் போன்ற வசதிகளையும் இந்த ஏவுகணை சோதனை உறுதிப்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது.

ஹைப்பர்சோனிக் ஆயுதங்கள் பொதுவாக பாலிஸ்டிக் ஏவுகணைகளை விட குறைந்த உயரத்தில் இலக்குகளை நோக்கி பறக்கும் மற்றும் ஒலியின் வேகத்தை விட ஐந்து மடங்குக்கும் அதிகமான வேகத்தை அடைய முடியும். அல்லது மணிக்கு 6,200 கிமீ (மணிக்கு 3,850 மைல்கள்) பயணிக்கும். பாலிஸ்டிக் ஏவுகணைகளை விட நீண்ட நேரம் கண்டறிவதைத் தவிர்க்கக்கூடிய ஹைப்பர்சோனிக் ஏவுகணையின் இரண்டாவது சோதனை இதுவாகும். பியோங்யோங்கின் பாதுகாப்பை வலுப்படுத்துவதாக வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன் முன்னதாக சபதம் செய்திருந்த நிலையில் இந்த சோதனை வந்துள்ளது.

கொரிய தீபகற்பத்தில் அதிகரித்து வரும் ஸ்திரமற்ற இராணுவச் சூழல் காரணமாக, பியாங்யோங் தனது பாதுகாப்புத் திறனைத் தொடர்ந்து வலுப்படுத்திக் கொள்ளும் என கிம் புத்தாண்டு உரையில் கூறினார். தென்கொரியா மற்றும் அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தை முடங்கிய நிலையில் வடகொரியா கடந்த ஆண்டு பல்வேறு ஏவுகணைகளை சோதனை செய்தது. ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளை உருவாக்கும் முயற்சியில் அமெரிக்கா மற்றும் சீனா உள்ளிட்ட சிறிய எண்ணிக்கையிலான நாடுகளுடன் வடகொரியாவும் இணைந்துள்ளது. சியோலில் பாதுகாப்பு அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்பு, சமீபத்திய ஏவுதல் புதன்கிழமை அதிகாலை ஜப்பானிய கடலோரக் காவல்படையால் கண்டறியப்பட்டது.

## போலந்து ஜனாதிபதிக்கு இரண்டாவது முறையாகவும் கொரோனா தொற்று!

போலந்து ஜனாதிபதி ஆண்ட்ரெஜ் டுடாவுக்கு இரண்டாவது முறையாக கொரோனா வைரஸ் (கோவிட்-19) தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது.49 வயதாகும் ஆண்ட்ரெஜ் துடா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவர்களின் கண்காணிப்பில் இருந்து வருவதாகவும், அவரது உடல்நிலை சீராக இருப்பதாகவும் அவரின் உதவியாளர் பாவெல் ஸ்ரோட் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டின் தொடக்கத்திலேயே கொரோனா தடுப்பூசியின் 2 டோஸ்களை செலுத்திக்கொண்ட ஆண்ட்ரெஜ் டுடா, கடந்த மாதம் பூஸ்டர் டோஸ் தடுப்பூசியையும் செலுத்திக்கொண்டார். இதனிடையே ஜனாதிபதி அலுவலகத்தில் பணியாற்றி வரும் ஊழியர்கள் சிலருக்கு அண்மையில் கொரோனா பாதிப்பு உறுதியானதைத்தொடர்ந்து, ஜனாதிபதி ஆண்ட்ரெஜ் டுடாவுக்கு கொவிட் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது அவருக்கு கொரோனா தொற்று இருப்பது அன்று (புதன்கிழமை) உறுதியானது. போலந்தில் புதன்கிழமை 17,000க்கும் மேற்பட்ட புதிய தொற்றுகள் மற்றும் 630க்கும் மேற்பட்ட கூடுதல் இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. 38 மில்லியன் மக்கள்தொகை கொண்ட நாட்டில், 4 மில்லியனுக்கும் அதிகமான தொற்றுகள் மற்றும் கிட்டத்தட்ட 99,000 இறப்புகளைப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 09.01.2022 அன்று வெளியிடப்பட்டது.